AHARAM

# அகரம்

எண்: 12 எழுத்து: 09 செப்டெம்பர் : 2018 | துல் ஹஜ் - முஹர்ரம் : 1439

பொதுசன நூலகம்
16 SEP 2018

# சங்கு

## சுருளுக்குள் சுற்றியிருக்கும் அல்லாஹ்வின் அற்புதம்






## நீங்கள் ஒரு கண்டுபிடிப்பாளரா?

-ஸகீ லதீப்-

50/= மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM
அகரம்

எண்: 12 - செப்டெம்பர் : 2018 - எழுத்து: 09




பிரதம ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 892 7350**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

**சந்தா விபரம்**

தனிப் பிரதி : 50/=
1 வருட சந்தா : 800/=
6 மாத சந்தா : 400/=

உங்களுடன் ஆசிரியர்...

# வாசிப்பின் மாதம்

சிறகுகளை வாசிப்பு தருகின்றது. கடந்த காலம் தன்னுள் பதுக்கி வைத்திருக்கும் பொக்கிஷங்களை நம் முன் பரப்பி விடுகின்றது. செங்கம்பளத்திற்கு எம்மை அழைத்துச் செல்கின்றது. மொத்தத்தில் வாசிப்பு ஒருமந்திரக் கோலாக மாறி விடுகின்றது.

**செப்டெம்பர் - வாசிப்பின் மாதம்**

ஆழமாக கருத்துக்களை கொண்ட நூல் ஒன்றை வாசித்து முடிக்கும் போது ஆழ்மனதில் பூக்கும் அறிவுப்புக்களின் பெறுமதியை வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. இலக்கிய நூல் இதயத்தின் ஒட்டடைகளை துடைத்தெறிந்து விட்டு ஆயிரம் வர்ணங்களை தீட்டுகின்றது. வரலாற்று நூல், ஆய்வு நூல், பயண நூல், அறிவியல் நூல், என ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு உலகிற்கு எம்மை அழைத்துச் செல்கின்றன.

ஒவ்வொரு ஆணுடைய வெற்றிக்கு பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்ற கருத்து எவ்வாறு போனாலும் நிச்சயமாக ஒவ்வொரு தலைவரின் பின்னாலும் ஆழமான கருத்துக்கொண்ட நூல்கள்தான் இருக்கின்றன.

நாம்?

இறுதியாக எப்போது நூல் ஒன்றை வாசித்து முடித்தோம்?

இறுதியாக எவ்போது நூல் ஒன்றை வாங்கினோம்?

இறுதியாக எப்போது நூல் ஒன்றை மற்றவருக்கு பரிசளித்தோம்?

போன்ற கேள்விகள் எமக்கும் நூல்களுக்கும் இடையில் உள்ள காதலை விளக்கப்படுத்த போதுமானவையாகும்.

நெடுங்காலமாக புகைந்து கொண்டிருக்கும் உலகிற்கு விடுதலையையும் எரிந்து கொண்டிருக்கும் மானுட உள்ளங்களுக்கு மீட்சியையும் வாசிப்பால்தான் தரமுடியும். வாசிப்பு இணையற்ற காதல்!

வாசிப்பை ஆன்மாவுக்கான தீனி என வர்ணிக்கின்றார் பிரபல எழுத்தாளர் எஸ் ராமகிருஷ்ணன். உடலுக்கு உணவு போல, உள்ளத்திற்கு மகிழ்ச்சி போல, ஆன்மாவுக்கான தீனியாக வாசிப்பு அமைகின்றது. மனிதர்களை நிரப்பமாக்குகின்றது. மாய கண்களை வழங்கி அறியாமைச் சேற்றிலிருந்து வெளிவர புன்னகையுடன் உதவி செய்கின்றது. அகமும் புறமும் அறிவியல் விளக்கை ஏற்றி விடுகின்றது.

உலக மக்களுக்கு அருளாகவும் அற்புதமாகவும் வந்த அல்குர்ஆன் ''வாசிப்பீராக'' என்ற வார்த்தையிலிருந்தே தனது போதனைகளை உலகிற்கு அறிமுகம் செய்தது. வாசிக்கும் தனி மனிதனும், வாசிக்கும் சமுகமும் தான் உலகில் வளமான மனிதர்களாகவும் சமூகங்களாகவும் மிளிர்ந்துள்ளனர். எனவே எமது அறிவுப் பயணமும் வாசிப்பிலிருந்து துவங்கட்டும்!

வாசிப்பை நேசிப்போம்!
வாசிப்பை யாசிப்போம்!
வாசிப்பை சுவாசிப்போம்!

இப்படிக்கு
அன்புடன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக் கதை

# எட்டுத்திசையிலும் வீசும் மணம்



முஸ்அப் இப்னு உமைர் மக்காவின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒருவர். பாதையில் அவர் இறங்கி நடந்தால் வெகு தொலைதூரத்திற்கு அவரது நறுமணம் கமழ்ந்து செல்லும். அதை வைத்தே முஸ்அப் இப்னு உமைர் சென்று கொண்டிருக்கின்றார் என மக்கள் விளங்கிக் கொள்வார்கள்.

சிறிது காலத்தில் தனது மணத்தைவிட இன்னொரு மணத்தை முஸ்அப்பின் மனம் விரும்பியது. அது சுவனத்தின் மணமாகும். அதனால் அவர் இத்தனை காலமாக வணங்கி வந்த சிலைகளை தூக்கியெறிந்து விட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

தன் மகன் மதம் மாறியது அவரது தாய்க்கு துளியும் பிடிக்கவில்லை. உடனே அவரது அனைத்து செல்வங்களையும் பிடுங்கிக் கொண்டு ஓர் இருட்டறையில் அடைத்து வைத்தார்கள். ஆனாலும் ஒருவாறு முஸ்அப் தப்பிச் சென்றுவிட்டார்.

உஹத் போரில் முஸ்லிம்களின் கொடியை ஏந்தி நின்ற அவரின் இரு கைகளையும் வெட்டி முதுகில் ஈட்டியால் குத்தி கொன்றனர். அவரை கப்றில் வைத்தபோதுபோதியளவு கபன் துணி இன்மையால் இலை குழைகளை வைத்துதான் அடக்கம் செய்தார்கள்.

தான் விரும்பிய சுவனத்தின் மனதை அவர் வென்று விட்டார்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் பூங்கா

الحديث

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''மனிதர்களில் அதிகமானோர் இரண்டு அருட்களில் அலட்சியமாக உள்ளனர். ஒன்று, ஆரோக்கியம்; மற்றையது, ஓய்வு.'' (ஸஹீஹுல் புஹாரி)

# ''இரண்டு அருள்கள்

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கின்ற முக்கியமான இரண்டு அருள்களான ஆரோக்கியம் மற்றும் ஓய்வு நேரம் பற்றி இங்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கியிருக்கின்றார்கள்.

ஆரோக்கிய வாழ்வு உலகில் மனிதன் பெற்றுக் கொள்கின்ற உயர்ந்த செல்வமாகும். அதன் பெறுமதியை, நோயுறும் போதே அவன் உணர்கிறான்.

தனக்காகவும் தனது குடும்பத்திற்காகவும் இராப் பகலாக உழைத்துக் களைத்துப் போகும் மனிதனுக்கு அல்லது கற்றல் போன்ற ஒரு காரியத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு களைத்தவனுக்கு ஓய்வு இன்றியமையாதது.

''நாம் உங்களுடைய தூக்கத்தை உங்களுக்கு இளைப்பாறுதலாக (ஓய்வாக) ஆக்கியுள்ளோம்.'' (அல்குர்ஆன்)

ஓய்வு இல்லாத மனிதன் மன உழைச்சலுக்கு ஆளாகி விடுகிறான். எனவேதான், ஓய்வு மிகப் பெரும் அருளாகக் கணிக்கப்படுகின்றது. ஓய்வின் மூலம் மனிதன் உத்வேகமும் செயற்திறனும் அடைவதோடு அவனது உள்ளமும் ஓர் அலாதியான அமைதியை உணர்கிறது. அல்லாஹ்வின் அருளான ஓய்வு நேரம் பற்றியே இங்கு நோக்குவோம்;

உலக வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டுமானால் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள நேரத்தின் பெறுமதியை அவன் உணர்ந்து கொள்ளல் அவசியம். மனிதன் சந்திக்கின்ற நேர வகைகளுள் ஒன்றே ஓய்வு நேரமாகும்.

சிலர் தமது நாள் முழுவதையும் ஓய்வாகவே கழிக்கின்றனர். இதன் விளைவாக படுசோம்பேறிகளாக மாறி வருகின்றனர். இன்னும் சிலர் ஓய்வேயில்லாது உழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹதீஸில் ஓய்வு நேரம் ஓர் அருள் என குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாஹ் நமக்களித்த அருள்கள் தொடர்பாக மறுமையில் விசாரணை செய்யப்படுவோம் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

இவ்வருளின் பெறுமதியை இன்று மக்களில் அதிகமானவர்கள் புரிந்து கொள்ளாமையினால் பிரயோசனமற்றும், பாவனமான காரியங்களிலும் ஈடுபடுகின்றனர். மற்றும் சிலர் தமது ஓய்வு நேரங்களை வீட்டோடு பிரயோசனமற்று கழித்து விடுகின்றனர்.

ஓய்வு நேரங்களில் அல்லாஹ்வின் அத்தாட்சிகளை கண்டுகளித்தல், ஆகுமான விளையாட்டுக்களில் ஈடுபடுதல், சமூக சேவைகளில் ஈடுபடல், வாசிப்பு மற்றும் திக்ர், அல்குர்ஆன் திலாவத் போன்றவற்றில் ஈடுபடுவதால் உடலும் உள்ளமும் அமைதியையும் மகிழ்ச்சியையும் உணர்கின்றன.

நபியவர்கள் தமது வீட்டின் முன்னால் இருந்து கொண்டு ஆகுமான விளையாட்டுக்களை கண்டுகளிப்பவர்களாக இருந்தார்கள்.

எனினும், ஒரு தடவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நீ மிகவும் வேலைப்பளுமிக்கவனாக மாறுமுன் உனக்கு இறைவன் வழங்கியிருக்கும் ஓய்வு நேரத்தை சிறந்த முறையில் நல்லமல்கள் செய்வதில் பயன்படுத்திக் கொள் என்றார்கள்.

எனவே, எமக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகள். அது பாடசாலை விடுமுறையாக இருந்தாலும் சரியே. வளர்ந்து வேலைப் பளுவினால் அவதியுறும் நிலை வருமுன் எம் ஓய்வு நேரத்தை வீணாக கழித்து விடாது பெறுமதிமிக்கதாக பயன்படுத்தி, அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

தொடர் - 13

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# யூனுஸ் நபியின் திமிங்கிலம் 02

யூனுஸ் நபியை விழுங்குவதற்கு இறைவனால் தெரிவு செய்யப்பட்ட திமிங்கிலம் நான்தான் என்பதை முற்கூட்டியே நான் அறிந்திருக்கவில்லை. அவரை விழுங்கிய பின்புதான் அவர் ஓர் இறைத் தூதர் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. எனது முழு வாழ்க்கையிலும் நான் அனுபவப்பட்ட கடுமையான நிகழ்ச்சியாக அது இருந்தது என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

நெற்றியில் வியர்வை துளிர்க்கும் இனமோ, கனிவும் பரிவும் கொண்டு கண்ணீர் புரண்டோடும் படைப்போ அல்ல திமிங்கிலங்கள்.

ஆயினும், நெற்றி வியர்ப்பதையும் பட்சாதாபம் கண்களில் பொழிவதையும் நான் உணர்ந்தேன்.

சமுத்திரத்தில் மற்ற கொடு விலங்குகள் நான் அழுவதைக் கண்டுவிடுமோ என்ற அச்சம் என்னுள் எழுந்தது. கடல் சாம்ராஜ்யத்தின் கம்பீரமான அரசனான எனது முறிபடாத கிரீடம் சற்றேனும் பழுதடைய இடம்கொடுக்கக் கூடாது.

கடலில் ஒரு யானையைப் போல பிரமாண்டமான எனது சரீரம், எத்தனை தொன்கள் எனது பாரம்.

தண்ணீர்ப் பரப்பில் பெரும் விலங்குகளுக்கெல்லாம் அச்சமூட்ட எனது ஆஜானுபாகுவான தோற்றம் ஒன்றே போதும். என்னைக் கண்டு தலைதெறிக்க ஓடும் இவை சில சமயங்களில் பெரும் பாறைகளிலும் சென்று முட்டி மோதிக் கொள்ளும்.

இருந்தாலும், நான் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தேன், கதையின் அந்தத்தை நோக்கி நான் பாயவில்லை.

அந்த சம்பவம் என்னை அப்படியே தளர்ந்து போய்விடச் செய்து விட்டது. நான் நோயாளியாகிப் போனேன்!

எனது வயிறு அம்பர் நறுமணப் பொருளை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டது! நோயுற்று உயிர் பிரிய நெருங்கிய காலத்தில்தான் எமது வயிறுகள் அம்பர் உற்பத்தியைத் தொடங்கும்.

எனது தலை சுற்றுகின்றது... வால் அர்த்தமில்லாமல் துடிக்கின்றது... நான் மேலெழுந்து பரப்பிற்கு வருகின்றேன்...

நான் தண்ணீரின் மேலெழத் தொடங்குகின்றேன்... எனது இரகசியத்தை தண்ணீர் மூடி மறைக்கின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது தந்தையின் முகம் எனது நினைவில் வருகின்றது. வெள்ளை நிறம் கொண்ட கம்பீரமான முகம். 90 மீற்றர் நீளம்!. எனது தாய் அவரது மூன்றாவது மனைவி. தாயின் நீளம் வெறும் 25 மீற்றர்கள். எங்களது விசேடம் என்னவென்றால், நாங்கள் கடலில் வாழும் முலையூட்டிகள்! குட்டியீன்று முலையூட்டும் விலங்குகள் நாங்கள்!

எனது தாய் அழகு கொழிக்கும் சுந்தரியாக இருந்தாள். ஆயினும், புன்னகை மருந்துக்கும் கிடையாது. எனது தந்தையும் அப்படியே! அவர் சிரித்ததை நான் வாழ்நாளிலேயே கண்டிருக்க மாட்டேன்!

ஒரு நாள் ''திமிங்கிலங்கள் ஏன் புன்னகை புரிவதில்லை?'' என்று நான் தந்தையிடம் வினவி விட்டேன். அவருக்கோ வந்ததே கோபம்!

''வாயை மூடு…'' ''கடலில் வாழும் வன் மிருகங்கள், நாங்கள் சிரிக்க முடியுமா…?'' எனது தாயை கோபாவேசத்துடன் நோக்கிக் கொண்டு தந்தை அதட்டினார்.

''இவனைத் தண்டிக்க வேண்டும்!''

எனது தாய் மிகத் தூரத்துக்கு என்னை இழுத்துச் சென்று காதோடு பொத்திச் சொன்னார், ''மகனே! நாங்கள் கடலில் வாழும் வன் மிருகங்கள்! எங்களுக்கு ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம் இவையொன்றும் கிடையாது! நாங்கள் சிரிக்கவோ, புன்னகைக்கவோ கூடாது. எங்கள் போக்கை விட்டு விட்டு நீ மாறி விடாதே!'' தாயின் உபதேசங்கள் தொடர்ந்தன.

தந்தையின் கோபத்தையும் மூர்க்கமான பழக்கங்களையும் கண்டிப்பையும் தவிர எனது இளமைக் காலம் ஆனந்தமும் சந்தோஷமுமாகவே இருந்தது.

நான் பிறந்தபோது சுமார் 10 மீற்றர் நீளமாக இருந்தேன். என்னைச் சுற்றிக் கொண்டு வந்த எனது தந்தை, ''பரவாயில்லை! பையன் நீளமாகத்தான் இருக்கின்றான். என்னைப் போலவே வெள்ளை நிறமாக இருக்கின்றான். எனக்கும் விருப்பமாகவே இருக்கின்றது என்னைப் போலவே இவனையும் வளர்த்தெடுக்க வேண்டும்'' என்று என் தாயிடம் கூறினார்.

இப்படி அறிவுரை பகர்ந்துவிட்டு கடலில் முங்கி மூழ்கினார் என் தந்தை.

எனது தந்தையின் வீரப்பிரதாபங்கள் எல்லாம், உட்கடல்கள் எல்லாம் பிரசித்தம்! மூர்க்கத்திலும் குரூரத்திலும் வேகத்திலும் பேர் போனவராக என் தந்தை இருந்தார். சமுத்திரத்திலுள்ள பயங்கர விலங்குகளுக்கெல்லாம் அத்தியாவசியமான மூன்று குணங்கள்தான் இவை.

எனது தந்தை சமுத்திரத்தின் இராஜவாக தன்னை நிலைப்படுத்தியிருப்பதை நான் விளங்கிக் கொண்டேன். தாயின் கருவறையில் ஆறுமாதங்கள் வளர்ந்து உலகை எட்டிப் பார்த்த நான், மேலும் ஆறுமாதங்கள் தாயிடம் பால் அருந்தி வளர்ந்தேன்.

இக்காலப் பிரிவில் இரண்டே இரண்டு தடவைகள் மாத்திரமே நான் எனது தந்தையைச் சந்தித்திருந்தேன். நான் பால் குடித்து வாழ்ந்த இந்தக் காலத்தில் தந்தையை விடவும் மிகவும் விருப்பமானவராக எனது தாய் இருந்தார். அன்பும் கனிவும் நிறைந்தவளாக எனது தாய் இருந்தார்.

ஒரே ஒரு தடவை மட்டுமே எனது தாயின் மூர்க்கத்தனத்தை நான் கண்டேன்! சுறாக்களின் ஒரு கூட்டம் என்னை ஆக்கிரமிக்க வந்தபோதே அது நடந்தது. முதலில் என்னோடு விளையாட வரும் ஒரு புதிய நண்பர் கூட்டம் என்று நான் நினைத்து விட்டேன். அதனால் அசமந்து போன என்னை அவர்கள் தாக்கத் தொடங்கியபோதுதான் நான் என்னை சுதாகரித்துக் கொண்டு அபயக் குரல் எழுப்ப ஆரம்பித்தேன். அப்போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த எனது தாய் தன் வாலைச் சுழற்றி நாலு புறமும் அடித்த அந்தப் பயங்கர அடி இருக்கிறதே! அவ்வளவு மூர்க்கமாக இருந்தது அந்தத் தாக்குதல். சுறாக்கள் அடிபட்டு சின்னாபின்னமாகி, தலைதெறிக்க ஓடுவதை நான் கண்டேன்.

**(இன்ஷா அல்லாஹ் தொடரும்…)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் வாழ்வோர் 08



# சமூகப் போராளி
# சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார்

✍ வ. முஹம்மத் நபீல்

அரசியல் ஓர் ஆயுதம். அதனால் அராஜகங்களை அரங்கேற்றவும் முடியும். மக்களுக்கு கனவு தேசத்தை பரிசளிக்கவும் முடியும். அதிகாரத்தை அடையும் போராட்டத்தை அரசியல் என வரையறுக்கின்றோம். அந்த போராட்டத்தில் வெற்றி பெற்று மக்களுக்கும் தேசத்திற்கும் அரும்பணி செய்த ஒரு மாவீரரின் கதையை அகரம் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றது.



### பிறப்பும் இள வயதும்

சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் 1879 செப்டெம்பர் 7 ஆம் திகதி காலி கோட்டையிலுள்ள, சேர்ச் வீதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் பிறந்தார். அவரின் தந்தை புகழ் பெற்ற மாணிக்க வியாபாரியான ஏ.எல்.எம். மாக்கான் மாக்கார் ஆகும். இலங்கையில் மாத்திரமின்றி லண்டன், பரிஸ் போன்ற நகரங்களிலும் புகழ் பெற்றிருந்த அவரது மாணிக்க வியாபாரத்தின் வாடிக்கையாளர்களாக அரச குடும்பத்தினரும் பிரபுக்களும் இருந்தனர் என்ற விடயம் சிறப்புக்குரியதாகும்.

1910 ஆம் ஆண்டு கொழும்பைச் சேர்ந்த நூர் நயீமா அவர்களை திருமணம் செய்த அவருக்கு கிடைத்த குழந்தைகள் அனைவரும் சிறந்த கல்வி ஞானம் உடையவர்களாக இருந்தனர்.

### ஆரம்ப கல்வி

முஹம்மத் மாக்கான் மாக்கார் தனது ஆரம்ப கல்வியை ''ஆல் செயின்ட்ஸ்'' கல்லூரியிலும் பின்னர் கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் பெற்றார். மருத்துவத் துறையில் பிரகாசிக்க வேண்டும் என்பது அவரது கனவாயினும் பின்னர் வர்த்தகத் துறையில் சாதிக்க முயன்றார்.

### சமூகப் பணிகள்

சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் தமது அரசியல் மற்றும் பொதுப் பணிகளை 1906 ஆம் ஆண்டு காலி மாநகர சபை உறுப்பினராக ஆரம்பித்தார். 1931 ஆம் ஆண்டு வரை அந்த பதவியில் இருந்து கொண்டு தேசத்தின் நலனிற்காகவும் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட அவர், தனது மரணம் வரை அளப்பரிய சேவைகளைத் தொடர்ந்தார்.

- 1940 ஆம் ஆண்டிலிருந்து 1943 வரை கொழும்பு மாநகர சபை உறுப்பினராக கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 1903 ஆம் ஆண்டிலிருந்து 1915 வரை துருக்கி கௌன்ஸளராக இருந்தார்.

❖ அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராக இருந்ததுடன் சோனகர் சங்க வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றினார்.

❖ 1924 ஆம் ஆண்டு செப்டெம்பரில் முஹம்மத் மாக்கான் மாக்கார் சட்ட நிரூபண சபை அங்கத்தவரானார்.

சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் அரசியலில் பிரவேசித்த காலம் வரலாற்று முக்கியத்துவமிக்கதாக இருந்தது. இலங்கைக்கு சுயாட்சி கிடைக்க வேண்டும் என ஒரு குழுவினரும் ''இலங்கையை ஆளும் விடயத்தில் முஸ்லிம்களுக்கு எவ்வித பங்கும் இல்லை. அவர்கள் தனியான ஓர் இனமே அல்ல'' என்று இன்னொரு குழுவினரும் கூறிக் கொண்டிருந்தனர். இந்த வகையில் சேர் மாக்கான் மாக்கார் போன்றோரின் அரசியல் பிரவேசமானது மிக முக்கிய ஒன்றாக அமைகின்றது.

''நாம் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட சனத் தொகையை கொண்ட சமூகத்தினராவர். எமக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லாது போனால் நாட்டின் பொது நலனுக்கே அது உகந்ததல்ல. நான்கைந்து வருடங்களுக்கு முன்பே முஸ்லிம்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. அவ்வாறு வாக்குரிமை பெற்ற 12000 பேரில் 10000க்கு மேற்பட்டோர் வாக்களித்தமை பெருமைப்படக் கூடியே விடயமாகும். இது எதனைக் காட்டுகிறது? இந்நாட்டு அலுவல்களில் முஸ்லிம்களும் கரிசனையோடு பங்கெடுக்க விரும்புவதைனையே அது காட்டுகிறது'' என அவர் கூறிய வரிகள் ஒவ்வொன்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

டொனமூர் அறிக்கையின் பிரகாரம் 1931இல் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர், பின்னர் சோல்பரி ஆணைக்குழுவின் விதந்துரைப்பின் பிரகாரம் நிறுவப்பட்ட சபைக்கு 1947 ஆம் ஆண்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டு, அவர் காலமாகும் வரை அச்சபையில் சேவையாற்றினார். 1938 இல் சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் அவர்களை பிரித்தானிய அரசு சேர் பட்டம் வழங்கி கௌரவம் செய்தது. அதனை நாடு முழுவதும் பல்வேறு வரவேற்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் அரங்கேறின.

சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கும் மிகவும் பங்காற்றினார். காலி கோட்டையில் அமைந்துள்ள பஹ்ஜத்துல் இப்றாஹிமிய்யா அரபுக்கல்லூரி அவரது தாயாரால் அமைக்கப்பட்டதுதான். அந்த கல்லூரியையும் வளர்த்தெடுப்பதில் அரும் பங்காற்றினார் அவர்.

இயல்பிலயே பெரும் வர்த்தக பரம்பரையில் பிறந்தாலும் தமது அனைத்து வளங்களையும் திறமைகளையும் பயன்படுத்தி, சமூகத்திற்கு பங்காற்றிய சேர் மாக்கான் மாக்கார் நமக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகும்.

---

**சிந்தனைக் கதை**

# மன்னித்துவிடு தாயே

மரணம் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், அந்த பொழுதில் ஷஹாதா கலிமாவை மொழிந்தவாறே இந்த உலகை விட்டு விடைபெற வேண்டும் என்றே அனைத்து முஸ்லிம்களும் விரும்புவார்கள். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், அல்கமா என்ற ஸஹாபிக்கு இறுதி நேரத்தில் கலிமாவை மொழிய முடியவில்லை.

முதலில் அண்ணலார் தன் தோழர்களை அனுப்பிப் பார்த்தார்கள். அவர்கள் முயன்றும் அல்கமாவால் கலிமாவை மொழிய முடியவில்லை.

அதன் பின்னர்தான் உண்மை தெரிய வருகின்றது. திருமணத்தின் பின்னால் அல்கமா தனது மனைவியின் பேச்சைக் கேட்டு தன் தாயை மதிக்காமல் நோவினை செய்தது தெரிய வருகின்றது.

அந்த தாயை சந்தித்த அண்ணலார் நிலைமையை எடுத்துக்கூறி அல்கமாவை மன்னித்து விடுமாறு கூறினார்கள். ஆனால், மிகவுமே நொந்துபோயிருந்த அந்த தாயால் தன் மகனை இலகுவாக மன்னிக்க முடியவில்லை.

உடனே அண்ணலார் விறகுக் கட்டைகளை சேர்த்து அல்கமாவை எரிக்கப் போவதாக பயமுறுத்தியதும் அன்பே அடையாளமான அந்த அன்னை தன் மகனை மன்னித்து விடுகிறார்கள். அதன் பின்னால்தான் அல்கமாவால் கலிமாவை மொழிய முடிகின்றது. அன்றைய தினமே அவர் மன்னித்துவிட அண்ணலாரே அவரது ஜனாஸாவுக்கு தொழுகை நடாத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொது அறிவு வினாக்கள்

1. பண்டைய காலத்தில் வெள்ளி அளக்கப்பட்ட அளவு முறை எது? தோலா
2. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர் யார்? கேனல் ஒல்கோட்
3. மனித மூளை தனது ஆயுட்காலத்தில் சேமித்து வைக்கக்கூடிய செய்திகளின் அளவு? 10 கோடி
4. நீரை உறிஞ்சிக் குடிக்கும் பிராணிகள் யாது? புறா, கோழி, பசு
5. கண்ணாடி செய்யப்படும் மணல் எது? சிலிக்கன் மணல்
6. கரப்பானின் இரத்தத்தின் நிறம் யாது? வெள்ளை
7. உலகில் மழைவீழ்ச்சி கூடிய இடம் எது? சீராப்பூஞ்சி (இந்தியா)
8. சிங்கராஜ வனத்தின் மொத்த பரப்பளவு யாது? 8864 ஹெக்டேயர்
9. மெழுகை பெற உதவும் பூச்சி எது? தேனீ

✍ பாத்திமா ஹிமாயா நவ்மான்
கலு/நளீம் ஹாஜியார் ம.க.
பேருவளை

# சிந்தனைத் துளிகள்...

- கெட்ட நண்பர்களோடு பழகுவதை விட தனிமை சிறந்தது.
- மற்றவர் குறைகளை மறைத்து விடு; இறைவன் உன் குறையை மறைத்து விடுவான்.
- சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டவன் என்றும் தோற்பதில்லை.
- நீ மற்றவனை முட்டாள் என்று நினைக்காதே; அடுத்த நிமிடம் நீ முட்டாள் ஆகிவிடுவாய்
- கற்க மறந்தாலும் கற்றதை மறக்காதே;
- அடுத்தவர் குறைகளை தேடுவதற்கு முன் உன் குறைகளைத் தேடு;

✍ அப்துல் மஜீத் ஹஸீனா பானு
பாத்திமா ஸஹ்ரா வளாகம்
ஓட்டமாவடி

# பொது அறிவு



- கடல் விவசாயம் என்று சிறப்பித்துக் கூறும் தொழில் எது? இறால் வளர்ப்பு
- கடல் ஆமைகளில் மிகப் பெரியது? லெதர் பேக் போட்டில் (800-900Kg)
- இலங்கையின் முதலாவது பிரித்தானிய தேசாதிபதி? பிரிட்றிக் நோத்
- உலகில் உள்ள நாடுகள் எத்தனை- 233
- நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு? நோர்வே
- மனித உடலின் மிகப் பெரிய அங்கம் எது? தோல்
- சுதந்திர நாடுகள் எத்தனை? 196

✍ சஃனா தௌபீக்
தி/மூதூர் ம.க.

# புரிந்து கொள்...

⇨ தோல்விகள் என்பது உன்னை தூங்க வைக்கப்படும் தாலாட்டு அல்ல...
நீ நிமிர்ந்து நிற்பதற்கான தேசிய கீதம்

⇨ நீ சுமக்கின்ற நம்பிக்கை
நீ கீழே விழும்போது உன்னை சுமக்கும்....

⇨ ஒருவர் உன்னை தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு
புகழ்ந்து பேசும்போது செவிடனாய் இரு
அப்போதுதான் வெற்றி நிச்சயம்

⇨ உன்னை கருவில் சுமந்த வளையும் உன் கருவை சுமப்பவளையும்
கல்லறை செல்லும் வரை நீ நேசிக்க மறக்காதே...



✍ வை.எப். ரீஸாதா
நிக/நம்முவாவ மு.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்பிற்கு சில வரிகள்...

நிலவின் ஒளிபோல் கலங்கமில்லாத நட்பு அமைவது நாம் ஏதோ ஒரு தருணத்தில் செய்த நன்மையின் அடையாளம்.

நல்ல நட்புக் கண்ணாடியைப் போன்றது... அது இருக்கும் ஒன்றை மறைப்பதும் இல்லை... இல்லாத ஒன்றை வெளிக்காட்டுவதும் இல்லை...

உயிரை கொடுக்கும் அளவுக்கு நண்பர்கள் வேண்டாம். எங்கேயும் எப்போதுமே யாருக்காகவும் விட்டுக் கொடுக்காத நட்பாக இருந்தாலே போதும்...



பூவின் மணமும் நட்பின் குணமும் ஒன்றுதான். பூ வாடினாலும் வாசம் போகாது; நட்பு பிரிந்தாலும் நேசம் போகாது.

யாரையும் அதிகம் நேசிக்காதே; ஒரு நாள் அவன் உன் எதிரி ஆகலாம். யாரையும் அதிகம் வெறுக்காதே; ஒரு நாள் அவன் உன் நண்பன் ஆகலாம்.

நாம் கோபத்தில் செய்யும் சிறு தவறுகள் கூட; நம் அன்பானவர்களை பெரிதும் பாதித்து விடும்.

பழகும் முன் தனிமை; பழகிய பின் இனிமை; பிரிந்தால்தான் தெரியும் நட்பின் அருமை.

நட்பு என்பது நடிப்பு அல்ல; நம் நாடித்துடிப்பு...

✍ **எப். அக்லா அமானுல்லா**
**அல் முஃமினாத் பெ.க.**
**குருகொட, அக்குரணை**

# அறிவிற்கு விருந்து

- ❖ இலங்கையில் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படும் அலங்கார மீன் - கப்பி **(Guppy)**
- ❖ உணவிலுள்ள புரத அளவை அளவிடும் முறை - **Kejeldhal** முறை
- ❖ தூய நீரின் நீர் செயற்பாட்டுப் பெறுமானம் - 01
- ❖ உயர் டீசல் உற்பத்திக்கு பயன்படுத்தத்தக்க சேர்வை - முக்கிளிசரைட்டு
- ❖ தீந்தை உற்பத்தியில் தைத்தேனியம் ஈரொட்சைட் **($Tio_2$)** பயன்படுவது - நிறப்பொருளாக
- ❖ முட்டையின் அக இயல்புகளை அறிய உதவுவது - கண்டலின் உபகரணம்
- ❖ ஒளித் தொகுப்பின் உயிர்ப்பான கதிர்ப்பின் அலை நீளம் - 400 - 700 **nm**
- ❖ இலங்கையின் வருடாந்த ஆள்வீத அரிசி நுகர்வு அண்ணளவாக - 100 **Kg**
- ❖ கியர் பெட்டிக்கு தேவையான உராய்வு நீக்கல் எண்ணெய் - **SAE 90**
- ❖ தொழில் நிலையத்தின் இரைச்சல் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட தரம் - 85 டெசிபல் 8 மணி நேர உச்ச சேவை நேரம்

✍ **ஏ. ஹாதிக் அகமட்**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**

# முத்துக்கள்

- ➢ சாதனை படைக்கத் துடிப்பவன் அடுத்தவன் கூறும் விமர்சனக் கருத்தை கேட்கத் தயங்க மாட்டான்.
- ➢ ஒருவன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல; விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
- ➢ பிறர் படும் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விடுவதை விட அவனது கண்ணீரைத் துடைக்க வழி செய்வதே மேலானது.
- ➢ காலத்தைக் கழிப்பவன்; வாழ்நாளை கொடுப்பவன் அல்லாஹ்.

✍ **யூ.எப். ஸம்லா**

**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க., ஓட்டமாவடி**

# உலக நாடுகளின் தேசிய மலர்கள்

- ➢ இலங்கை - நீலோற்பலம்
- ➢ எகிப்து - தாமரை
- ➢ இங்கிலாந்து - ரோஜா
- ➢ ஜெர்மனி - சோளப்பூ
- ➢ சீனா - நார்சிஸாஸ்
- ➢ பிரான்ஸ் - லில்லி
- ➢ ஈரான் - சிவந்த ரோஜா
- ➢ ஹங்கேரி - பூவரசம்பூ
- ➢ ஸ்கொட்லாந்து - நெருஞ்சிப் பூ
- ➢ ஜப்பான் - க்ரிஸாந்திமம்

✍ **ஐ.ஏ. ஹஸ்மினா**
**கிண்/பாத்திமா பெ.ம.வி.**
**முள்ளிபொத்தான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

# சங்கு

## சுருளுக்குள் சுற்றியிருக்கும் அல்லாஹ்வின் அற்புதம்

**அறிமுகம்**

சங்கு என்பது நடுத்தர அளவிலிருந்து பெரிய அளவு வரை வித்தியாசமான அளவுகளிலும் வடிவங்களிலும் நிறங்களிலும் காணப்படுகின்ற நத்தை ஓடுகளுக்கு வழங்கப்படுகின்ற பொதுப் பெயராகும். சிறிய அளவுள்ள ஓடுகளுக்கு சிப்பி என்றும் அதனை விடப் பெரிய நடுத்தர அளவில் உள்ளவை சங்கு என்றும் அழைக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் இவை Conch (கொன்ச்) எனப்படுகின்றன. சங்கு என்ற இப்பெயர், தனியாக ஓட்டுக்கும் அல்லது ஓட்டுடன் கூடிய நத்தைக்கும் வழங்கப்படுகின்றது. இவை கடல் வாழ் குடற்காலி மெல்லுடலிகள் (Gastropoda) குடும்பத்தைச் சேர்ந்தவை.

**ஓட்டின் தோற்ற அமைப்பு**

தோற்றத்தில் சங்கு என்பது கடினமான ஓட்டை உடைய, பெரிய சுருள் அமைப்புள்ள, கூம்புக் குழாய் வழியுள்ள ஓடாகும். இதன் கடினமான ஓடு சுண்ணாம்பினால் ஆனது. ஓட்டின் மேற்பகுதி பெரியோஸ்டிரகம் என்ற ஓட்டுறையினால் பாதுகாக்கப்பட்டுள்ளது. சங்கின் வயது செல்லச் செல்ல ஓடும் கடினமடையும். ஓட்டின் மீது முள் போன்ற வடிவங்களும் சுருள் சுருளான கோடுகளும் அமைந்து ஓட்டை அழகுபடுத்தும். வெள்ளை, பழுப்பு, கறுப்பு, சாம்பல் போன்ற விதவிதமான நிறங்களில் சங்குகள் காணப்படுகின்றன. ஓடுகள் பார்க்க அழகாக இருக்கும். ஓட்டினுட் பகுதி 'காலுமெல்லா' என்னும் அமைப்பால் சுற்றப்பட்டு (Spires) இருக்கும். சங்கின் வாய்ப் பகுதி இளம் சிவப்பு நிறத்தில் பளபளப்புடன் அழகாகத் தோற்றமளிக்கும். அதனுள்தான் நத்தை காணப்படுகின்றது.

ஓட்டின் வாய்ப் பகுதியை மூட, மூடி (Operculum) ஒன்று உண்டு. இது சங்கினுடைய பாதத்தில் அடிப்புறத்தில் ஒட்டியிருக்கும். பெண் சங்குகள் ஆண் சங்கை விட பெரியவை. ஆண் சங்கு குறுக்குவாட்டில் 57 முதல் 60 மி.மீ. வளர்ச்சி அடையும். பெண் சங்கு குறுக்குவாட்டில் 70 முதல் 80 மி.மீ. வளர்ச்சி அடையும்.

**ஓட்டுக்குள் இருக்கும் நத்தை**



சங்கின் ஓட்டுக்குள்தான் நத்தை வாழ்கின்றது. அந்த நத்தைக்கு நடமாடும் வீடுதான் அந்த சங்கு. பிறப்பிலிருந்து அந்த சங்கும் படிப்படியாக நத்தையுடன் சேர்ந்து வளர்ந்து வரும். நத்தையின் உடல் எழும்பற்ற தனி சதைப் பிண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் அது மிகவும் மிருதுவானது. எனவேதான் அல்லாஹ் தமது உடலைப் பாதுகாத்துக் கொள்ள அவற்றுக்கு இத்துணை பலமான ஓட்டைக் கொடுத்துள்ளான். ஆமைகள் போன்று ஆபத்துக்கள் வரும்போது அவை தமது முழு உடலையும் ஓட்டினுள் இழுத்து மறைத்துக் கொள்கின்றன. தமது கீழ்பகுதியில் இருக்கும் "Operculum" எனும் கடினமான மூடியால் ஓட்டின் வாய்ப் பகுதியை மூடி அடைத்துக் கொண்டால் எந்தவொன்றாலும் நத்தையைப் பிடிக்க முடியாது. மெல்லுடலிகள் என்பதால் தரையில் ஊர்ந்து செல்லும்போது கல்லிலும் மணலிலும் தமது தசைகள் பட்டு காயமடையாதிருக்க வயிற்றுப் பகுதி "Operculum" எனும் கடினமான பகுதியால் சூழப்பட்டிருக்கின்றது. அத்தோடு, வழு வழுப்பானதொரு பதார்த்தம் சுரந்து, நத்தைக்கு நகர வசதியைக் கொடுக்கும்.

### வகையினங்கள்

பொதுவாக, சங்கில் 80 திற்கு மேற்பட்ட வகைகள் உள்ளன. அணைத்து சங்குகளையும் இரண்டு வகையாகப் பிரிப்பர். அவை வலம்புரிச் சங்கு, இடம்புரிச் சங்கு என்பனவாகும். இவற்றுக்குள் வெண் சங்கு (Xancus pyrum), போர் சங்கு, ஊது சங்கு, பால் சங்கு, இளம் சிவப்பு சங்கு, கீற்றுச் சங்கு, சிலந்தி சங்கு எனப் பலவகையுண்டு. இந்தியச் சங்கு இனம், டர்பினல்லா பைரம் (Turbinella pyrum) எனவும் அழைக்கப்படுகிறது. சாங்கஸ் என்னும் சங்கினத்தில்



சாங்கஸ் பைரம், சாங்கஸ் எங்குலேட்டர், சாங்கஸ் லெவிகேட்டர் என்ற மூன்று சிற்றினங்கள் உள்ளன. இந்த மூன்று வகைகளில் சாங்கஸ் பைரம் என்னும் சங்கே சிறப்பானது. இப்படி, நிறத்திலும் அமைப்பிலும் அளவிலும் வித்தியாசமான பல வகையினங்கள் சங்கில் காணப்படுகின்றன.

### வாழும் இடங்கள்

சங்குகள் கூட்டம் கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை. கடலின் அடிமட்டத்தில் சுமார் 20 முதல் 25 அடி ஆழமுள்ள பகுதிகளில் வாழ்கின்றன. இந்த இடங்கள் சங்குப் படுகைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் பாறையோரத்தில் இருக்கும் திடமற்ற, மெல்லிய மணற் பகுதிகள் சங்குகள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களாகும். இந்தியாவில் தமிழகக் கடற்கரைப் பகுதிகளிலும் தூத்துக்குடி, இராமநாதபுரம், சோழ மண்டலம் மற்றும் கன்னியாக்குமரி ஆகிய நான்கு மண்டலங்களிலும் இச்சங்கு வளம் நிறைந்துள்ளது. அத்துடன், அந்தமான், குஜராத் மற்றும் இலங்கை கடற்கரைப் பகுதிகளிலும் இவை குறைந்தளவு காணப்படுகிறன.

### இனப்பெருக்கம்

ஜனவரி முதல் மார்ச் வரை மற்றும் நவம்பர் முதல் ஏப்ரல் வரையுள்ள காலம் சங்கின் இனப்பெருக்க காலம் ஆகும். இக்காலங்களில் ஆண் சங்குகள் இணை சேர்வதற்காக பெண் சங்குகளின் முன் ஒரு வகை நடனமாடும். இதனால் கவரப்படும் பெண் சங்கு இணை சேரும். இதன் பின்னர் பெண் சங்கு உயிர் முட்டைகளை இட ஆரம்பிக்கும். இனச் சேர்க்கைக்கு பின் வெளியிடும் முட்டைக் கூடு (Egg Mass) சங்குப் பூ எனப்படுகிறது. இதன் நீளம் 250 மி.மீ. முதல் 300 மி.மீ. வரை இருக்கும். இக்கூட்டின் குறுக்குவாட்டில் ஒன்றின் மீது ஒன்றென 24 முதல் 28 அறைகள் உள்ளன. ஒவ்வோர் அறைக்குள்ளும் ஆயிரக்கணக்கான கருவுற்ற முட்டைகள் (Fertilized Egg) இருக்கும். அறைகளின் பக்கவாட்டில் செவுள் போன்ற துளை உண்டு. இதன் மூலம் கருவுற்ற முட்டைகளுக்குத் தேவையான உயிர்வளி நீரிலிருந்து கிடைக்கிறது.

### சங்குக் குஞ்சிகள்

ஐந்து நாட்களின் பின்பு சங்குப் பூ எனும் முட்டைக் கூட்டினுள் இருந்து 10 மி.மீ. நீளமுள்ள இளம் சங்குகள் வெளிப்படுகின்றன. அது முதல் கடற் கரையை அடைகின்ற வரை சுமார் ஒரு மாத காலம் நீரில் மிதந்து கொண்டிருக்கும். கரையை அடைந்ததும் ஒரு வருட காலத்திற்கு மணலுக்குக் கீழேயே வாழும். பகல் பொழுதுகளில் மணலடியில் இருந்துவிட்டு, இராக் காலங்களில் உணவு தேடி வெளியே வரும். வருடப் பூர்த்தியின் பின்னர் கடலுக்குள் சென்று ஏனைய சங்குகளுடன் சேர்ந்து வாழ ஆரம்பிக்கும். பெண் சங்கு அல்லது இராணிச் சங்கு இனப் பெருக்கம் செய்யும் பருவத்தை அடைய ஐந்து வருடங்கள் செல்லும். சாதாரணமாக ஒரு சங்கு 20 வருடங்கள் வரை உயிர் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவு முறை**

சங்குகள் கடலடியில் கற்பாறைகளில் படிந் திருக்கும் பாசிகளையும் கடற் தாவரங்களையும் உண்டு வாழ்கின்றன. அத்தோடு, கடலடி ஊர்வன வான சிறு புழுக்களையும் சிறிய நத்தைகளையும் மீன்களையும் கூட உணவாக எடுக்கின்றன.

**வலம்புரிச் சங்கு**



சங்குகளை பிரதான மாக வலம்புரிச் சங்கு (Dakshinavarti Shankh), இடம்புரிச் சங்கு என இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். இடப்பக்கம் சுழிந்து செல் லும் சங்குகள் இடம்புரிச் சங்கு எனவும் வலது பக்கம் சுழியுடைய சங்குகள் வலம்புரிச் சங்குகள் (clock wise whorls) எனவும் பிரிக்கப்படுகின்றன. (வித்தியாசத்தை அறிய படத்தைப் பார்க்கவும்.) இடம்புரிச் சங்குகள் எளிதாகக் கிடைக்கக் கூடியன. ஆனால், வலம்புரிச் சங்குகள் ஆயிரத்தில் ஒன்றே கிடைக்கும் என்பதால் அவை மிக அரிது. இந்து, பௌத்த மதங்களில் வலம்புரிச் சங்கிற்கு ஒரு தனி இடமே உண்டு. அது புனிதமானதாகவும் வளத்தையும் நலத் தையும் தருவதாகவும் கருதப்படுகிறது. இதனால் வலம்புரிச் சங்கை இலட்சங்கள், கோடிகள் விலை கொடுத்து வாங்குபவர்களும் உள்ளனர். வலம்புரிச் சங்குகள் மேலான சக்தியைக் கொண்டவை என்ப தற்கு சான்று எதுவுமில்லை. வலம்புரிச் சங்குகள் இடம்புரிச் சங்கு போலன்றி மிக அரிதாகக் கிடைப் பவை என்பது மட்டும் உண்மை.

**வலம்புரி, இடம்புரி சங்குகள் உருவாகும் விதம்**

வலம்புரிச், இடம்புரி சங்குகள் உருவாவதற்குப் பிரதான காரணம் மரபணுக்களே. சங்குகள் கரு முட்டையாக வளரத் தொடங்கும்போது கலப் பிளவு நடைபெறும் கோணம் நேர் குறுக்காக அமையாமல் சற்று சாய்வாக அமைகிறது. இதன் போது மரபணுவின் சடுதிமாற்றத்தால் வலம்புரிச் சங்கு உருவாகிறது. மரபணு சடுதிமாற்றம் வெகு அரிதாக நிகழ்வது என்பதால் வலம்புரிச் சங்கும் அரிதாகவே கிடைக்கிறது. மற்றபடி உருவாகும் எல்லாச் சங்குகளும் இடம்புரிதான்.

**சங்குகளின் எதிரிகள்**

சங்குகளுக்கு சங்கு ஊதும் பிரதான எதிரி மனிதன்தான். முத்து எடுப்பதற்காகவும் உணவுக் காவும் சங்கின் ஓட்டுக்காகவும் சங்குகள் பிடிக்கப் படுகின்றன. அதேபோன்று ஆமைகளும், "nurse sharks' எனும் சுறா மீன்களும் நீள நண்டுகளும் (blue crabs), திருக்கைகளும் ஊசி முனைக் கடல் நண்டுகளும் (spiny lobsters) இவற்றின் முக்கிய எதிரிகள். உணவுக்காக இவை சங்குகளை வேட்டை யாடுகின்றன.

**பயன்கள்**

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.'' இப்படி தமிழில் ஒரு பழமொழி இருக் கின்றது. மன்னர் காலத்திலிருந்து யுத்தங்கள் ஆரம் பிப்பதற்காக சங்கு ஊதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. சும்மா இருந்த சங்க ஊதி யுத்த மொன்றையே தேவையில்லாமல் ஆரம்பித்த கதையைக் கூறுவதுதான் இது. யுத்தத்திற்கு மட்டு மல்லாமல் தகவல் பரிமாற்றத்திற்காகவும் சவ ஊர்வலங்களிலும் சடங்கு நிகழ்ச்சிகளிலும் சங்கு ஊதப்படும் வழமை இருந்து வருகின்றது. பொது வாக, வலம்புரிச் சங்குதான் ஊதுவதற்கு உசிதமா னது. எனவே, சிலர் சங்கு ஊதுவதை நல்ல சகுன மாகவும் சிலர் அதனை அபசகுனமாகவும் பார்க்கும் பழக்கமும் சில மத நம்பிக்கையாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

மேலும், உணவுக்கவும் சங்கு நத்தைகள் எடுக் கப்படுகின்றன. சங்கின் ஓட்டினால் வளையல், மோதிரம் போன்ற அணிகலன்கள் செய்யவும் ஓர் அலங்கார பொருளாகவும் பயன்படுகிறது. என்புருக்கி நோய், மஞ்சள் காமாலை, காசநோய், வயிற்று வலி மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோய் களில் இருந்து குணமடைய சங்குத்தூள் மருந் தாகப் பயன்படுகிறது. கடலில் வாழும் நண்டுகள் தமக்கான அடைக்கலமாக கடலில் இருக்கும் சங்கு ஓடுகளை எடுத்துக் கொள்கின்றன. இப்படி யெல்லாம் பல வகைகளிலும் சங்குகள் பயன் படுகின்றன.

இந்த சங்கிற்குள்ளும் பல சங்கதிகளை வைத் தவன் வல்லவன் அல்லாஹ்தான், அல்ஹம்து லில்லாஹ்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிபியா
# LIBYA




### அமைவு

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள லிபியா தன் எல்லைகளாக மத்திய தரைக்கடலையும், எகிப்து, சூடான், சாட், நைஜர், அல்ஜீரியா, துனீசியா போன்ற நாடுகளையும் கொண்டமைந்துள்ளது.

18 00 000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை கொண்டமைந்துள்ள லிபியா உலக வரிசையில் மிகப்பெரும் 17ஆவது நாடாகும்.

### வளங்கள்

ஆபிரிக்காவில் அதிகளவு வளங்களை கொண்ட நாடாக லிபியா திகழ்கின்றத. முதல்தர பெற்றோலிய வளம் கொண்ட பத்து நாடுகளில் லிபியாவும் உள்ளடங்குகின்றது. ஆனாலும், பெரும் பகுதியாக காணப்படும் பாலைவனம் அதன் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகின்றது.

### வரலாறு

பெர்பர்கள் லிபியாவின் ஆதிக்குடிகளாகும். வீரமிக்க அவர்கள் இஸ்லாத்தை தழுவி மாவீரர்களாக உலா வந்தனர். இத்தாலிய படைகளுக்கும் லிபியாவின் புகழ்பெற்ற சுதந்திர போராளி உமர் முக்தாருக்கும் இடையில் இடம்பெற்ற போர்கள் புகழ்பெற்றவை.

34 ஆண்டுகள் தொடராக ஆட்சி செய்துவந்த முஅம்மர் கடாபி கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட பின் தற்போது இடைக்கால நிர்வாகம் நடந்து வருகின்றது.

**தலைநகரம்- திரிப்போலி**
**ஆட்சி மொழி- அரபு**
**அரசாங்கள்- இடைக்கால அரசு**
**சட்டமன்றம் -தேசிய இடைக்கால பேரவை**
**விடுதலை- 24.12.1951**
**நாணயம்- தினார்**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu Alaikum
## my dear friends!!!

Since we are in a period where the climate keeps on changing rapidly, let me start up the issue for this month with "Seasons" as the main topic of discussion. First of all, its necessary for us to understand that Sri Lanka is not a country where the seasons keep on changing. Sri Lanka, like Malaysia and Indonesia is an equatorial country, meaning, it's located near the equator that cuts the globe into two equal halves. Hence, the climate of our country is uniform and thus like many other countries around the world which have various seasons, we don't.

But of course, we do have different climates in our country. Some times our climate is rainy or sunny or even windy. Hope most of you would have experience almost all of the above-mentioned climates.

Since we are into this topic, let me add further details for you to get a clear picture regarding this. There are 3 terms connected with the topic and they are; weather, climate and season. Although they appear to give out the same meaning, actually they are different from each other.

### Weather

Weather is the change in the atmospheric temperature and pressure for a short period of time. Eg: Hot, cool, sultry, humid, muggy etc....

### Climate

If the same weather continues for quite a long time, then it becomes the climate of the particular area where the weather was found.

Eg: Rainy, windy, sunny, cloudy etc....



### Season

If the climate keeps on extending for a remarkably long period of time, then it turns out to be the season of the particular region.

Eg: Spring, Autumn, Winter, Summer etc....

I believe that this would have given you some understanding about the issue we discussed so far. One thing we should understand is that, we Sri Lankans are lucky as we don't have to face the varied seasons hitting across the globe. Seasons, although they sound interesting and even exiting, they bring out adverse effects on the human activities. When the seasons keep on shifting, many people undergo many difficulties like, health issues, economic issues and even psychological issues.

My dear brothers and sisters, whatever the problem we face due to the climate change or change in the weather condition, we are supposed to accept it with utmost sabr, meaning patience. It is all, tests and trials from Allah (sbw) and hence we should not keep on complaining and moaning.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Aisha reported: When the Messenger of Allah, peace and blessings be upon him, saw rain, he would say, "O Allah, a blessed downpour."

## Your Corner

# The secret of success



One day a smart guy happened to talk with a samosa vendor. At first, the guy's intention was to pass the time. When he started the conversation, he was able to get information about the lifestyle of the vendor. The samosa vendor was able to earn 45,000 rupees a month and with this he was able to run another land business. These details created a great impression on the mind of the smart guy regarding the vendor.

Moral of the story: The outer appearance of a person never determines the success. It doesn't matter what type of job we do. It is always the way we do anything that matters.

Nishadha Jaamin
4th year
Islahiyya Ladies Arabic College
Puttalam

## *Giggle* a bit:



**Hamras:** Can Bees fly in the rain?

**Hamad:** Not without their yellow jackets.

# How beautiful is the Rain

How beautiful is the rain!
After the dust and heat
In the broad and fairy street
In the narrow lane
How beautiful is the rain!
How it clatters along the roofs
Like the tramp of hoofs
How it gushes and struggles out
From the throat of the over – flowing

Across the window pane,
It pours and swift and wide
With a muddy tide
Like the river down the gutter roars
The rain, the welcome rain!



Abul Hassan Fathima Afra
Grade 10
A/ Kallanchiyagama Arafa M.V
Kallanchiyagama
Kagama



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEAR DAD



You gave life to me
You gave strength to me
You forgot your life for me
You shared your life with me
I'm proud, because
You are the father of mine
I love you forever

**Siddique Fathima Sajinis**
**Jamia Aysha Siddeeqha.**

# Talent



Talent is the skill that enables someone naturally to do something that is hard. It is an ability that one is born with. People say "They are born with talent. It is a high degree of ability or of aptitude. Someone with talent is able to do something without trying as hard as someone who does not have a talent. Someone who has talent is called "talented". Talented people are talented in many fields, like; music, dance, drama, sports and many more. Some people have to work hard even if they are born with talent, in order be outstanding in his or her works.

**Fathima Shibly**
**K/ Madina National school**
**Madawala Bazaar, Wanguwa Kada**



# My favourite sport

My favourite sport is cricket Today it is the most popular game in Sri Lanka and other countries.I like cricket due to many reasons. When we play cricket we spend a lot of time in the open air. This is extremely good for our health. We get a lot of exercise when we play cricket. We need exercise for the healthy growth of the body. Sports are useful in various ways. Through sports, we learn to accept both victory and defeat alike. This makes us responsible citizens.Cricket also teaches us many good moral values. Cricket has many shots. They are front foot drive, pull shot, cut shot, back foot drive and Dill scoop.My favourite shot is the front foot drive and my favourite cricketer is Kumar Sangakkara. Cricket is my life and I play cricket all the time. My goal is to be a cricketer and one day I like to play for the Sri Lankan team.

**Mohammed zaid**
**Co/Al hikma College**
**Colombo.**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஜீனியஸ்?

1. பாக்கிஸ்தான் நாட்டின் தற்போதைய பிரதமர் யார்?
2. முதலாவது உலக் கிண்ண உதைப்பந்தாட்டம் எந்த நாட்டில் நடைபெற்றது?
3. லிபியா நாட்டின் தலைநகரம் எது?
4. சர்வதேச எழுத்தறிவு தினம் எப்போது கொண்டாடப் படுகின்றது?
5. உலகில் மழைவீழ்ச்சி அதிகமாக கிடைக்கும் இடம் எது?
6. எகிப்து நாட்டின் தேசிய பறவை எது?
7. இலங்கையின் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படும் அலங்கார மீன் எது?
8. சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?
9. அமேரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி யார்?
10. தலாய்லாமா எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்?

**போட்டி**

**இல: 11**




## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.

03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம்**

No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 30.09.2018

## யார் ஜீனியஸ்? போட்டி இல- 09 முடிவுகள்

### பரிசுக்குரியவர்கள்

**கே.எப். கனான்**
**தி/அந்நூரிய மு.ம.வி., குச்சவெளி.**

**எம்.என்.எப். சஹ்லா**
**அந்நூர் ம.க., பாணகமுவ, குருநாகல்**

**றி.பா. அஸ்மிலா**
**சம்மாந்துறை**

### பாராட்டுக்குரியவர்கள்

ஏ.எச்.எம். ரமீஸ் – நிகவரெட்டிய
ஆர். திவோனி – ஹில் கன்றி தே.பா., மடவளை
எம்.எம். உமர் நஸீப் – மாதம்பை
கே.எப். சஸ்னா – தெல்தோட்டை
எப். ரமீஸா – கடுகொட, காலி
ஏ.பீ.எம். ஆகில் – உடதலவின்ன
எம். அஹ்ஸன் – வியங்கல்ல, அகலவத்தை
எம்.ஆர்.எப். அதீபா – க/அக்குரணை மு.பெ.ம.க.
உமாரா ரிஸ்மி – மடவளை பஸார்
எச்.எம்.தல்ஹா – திரு/மூதூர் ம.க., மூதூர் – 05
எச்.எல். அப்துர் ரஹீம் – நிககொல்ல, யடவத்த
ஐ.எம்.எப். இல்மா – மடலஸ்ஸ, கெகுணகொல்ல
ஏ.ஏ.எம். அஸ்க்கான் – மூதூர் – 07
அஜிஸ்தா ஹுஸைன் – கல்லன்ஜியா கம, காகம
ஏ.எம்.எப். சஸீகா – மருதமுனை 02
எம்.எம்.எச்.எப். ஹஸ்னா – முருத்தகஹமுல
எம்.எப்.எப். பாஹிகா – புத்தளம்
எம்.ஐ.எப். ஹனா – ஹில் கன்றி தே.பா., மடவளை
எச். தூபா நஸ்ஹத் – கே/நாபாவள மு.ம.வி., அவிஸ்ஸாவல்ல
எப். சிப்னா ஜெமீல் – பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க., ஓட்டமாவடி
எம்.எஸ்.எப். முன்ஸிபா – அல் ஹாதியா இ.க. பறகாதெனிய
எம்.எச். ஹசீப் – மஹவத்த, மாவனல்லை
எம்.ஆர்.எப். அகீலா – தெவலவத்த, நிகவரெட்டிய
ஏ.எம்.எப். சன்பரா சுஹா – முஸ்லிம் பெ.அ.க., கள்எலிய
எம்.என்.எப். நிப்லா – நிக/பன்னவ மு.ம.க., கொபேகன்ன
எம்.ஐ.எப். ரிஹ்மா – வலவ்வத்த, மாவனல்லை
என். நஹ்தா – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன்ன
எம்.எப்.எப். பர்ஹா – ஹில் கன்றி தே.பா., மடவளை
எம். சப்ரின் – அட்டாளைச்சேனை 15
எம்.எச்.எப். ஹிஸ்மா – மடலஸ்ஸ, கெகுணகொல்ல
எம்.கே. பர்ஹானா – மாத்/அஜ்மீர் தே.பா., உக்குவலை
ஏ.எம். ஆசிப் – ஜாயா நகர், குச்சவெளி
எச்.ஏ. ஹாலா – நிக/பன்னவ மு.ம.வி., கொபேகன்ன
எம். சிராஸ் – ஹில் கன்றி தே.பா., மடவளை
எம்.ஆர். அஹமட் – ம/மின்ஹாஜ் மு.ம.வி., நிககொல்ல
எம்.ஆர்.எப். ருஸைக்க – நிக/அபுக்காகம மு.ம.வி., முன்னேகுளம்
என். சல்ஜி அஹமட் – அக்/முனவ்வரா அ.பா., அக்கரைப்பற்று
என்.எம். பயாஸ் – அன் நஹ்ஜதுல் இஸ்லாமிய்யா அ.க.
எம். ஹஸன் – தி/புர்கானிய்ய வி., மூதூர்
ஏ.எஸ்.எப். சபா – நாம்புலுவ, பஸியால
ஸைனப் ரிஸாட் – க/அக்குரணை மு.பெ.ம.வி.
ஆர்.எம். ஸைத் – அஸ்ஹர் முன்மாதி சி.பா., அக்குரணை
எம். ஆய்ஷா – தார்ஹா நகர், மூதூர் 07
ஆர்.எம். நுஹா – க/அக்குரணை மு.பெ.ம.வி.
எம்.என். ஆமினா – நாபாவல, அவிஸ்ஸாவெல
டீ.எச்.எப். ஷய்மா – வெலம்பொட மு.ம.வி.
எம்.ஐ. அப்துல்லா – ரஜவெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිංහල පිටුව

එම්.එස්.එම්. බජ්ජාන් (Dip in Teaching)
ඩී. එස්. සේනානායක විදුහල
කොළඹ 07

## අපි සතුන්ට ආදරය කරමු



මිනිසුන්ගේ ජීවතවලට සතුන් ඉතා සමීප ය. විශේෂයෙන් ම බල්ලන්, පූසන් වැනි සත්තු ඒ අතරින් ප්‍රධාන වෙයි. සතුන් මිනිසාගේ කටයුතුවලට පවා උපකාරි වෙති. කුඹුරු වැඩවලදී මී ගවයන්ද, ආරක්ෂාව සැපයීමට බල්ලන්ද අපට උපකාරි වේ. මේ නිසා අප සතුන්ට කරුණාව දැක්විය යුතු ය. සතුන්ට හිංසා නොකළ යුතු ය. අප සතුන්ට සලකන විට උන් ද අපට කළගුණ සලකයි. ඒ බව උන්ගේ ඉරියව්වලින් වටහා ගත හැකි ය. බල්ලා වලිගය වනා අපට පණිවිඩ සපයයි. පූසා ද එසේ ය. අප නොදැනුවත්ව සොබා දහමේ වෙසෙන සෑම සතෙක්ම අපට නන් අයුරින් ප්‍රයෝජනවත් වෙයි. ඒ සොබාදහමේ සමබරතාවය රැකගනිමිනි. අපේ ජීවිතවලට බොහෝ සේ අවශ්‍ය වන මේ සතුන්ට අපි ආදරය කරමු.

**එෆ් නුහා**
**කැකුණුගොල්ල ජාතික පාසල.**

## සුළඟ

මඳ සුළං හමනවා
ගස් කොළන් සැලෙනවා
මගේ ඇගේ වැනෙවා
විඩාව නිවෙනවා

මල් පොකුරේ හැපෙනවා
සුවඳ සුළගේ එතෙනවා
හැම තැනකම දුවනවා
මගේ හිතට සතුට දැනෙනවා

**රිහා මර්යම්**
**බදියුදීන් බාලිකා විදුහල,**
**මහනුවර.**

## තනි පද

නැරඹීමට පැරණි දේ රැස්කර තිබෙන තැන - කෞතුකාගාරය
හොඳම මිතුරා - අඹ යාළුවා
කටින් ම කඩා ගෙන - කැමැළලා කැම
වාහන පදවන්නා - රියදුරා
තමා උපන් රට - මවුබිම
නගරයේ වාසය කරන - නාගරික
අයහපත් ගති ඇති මිනිසුන් - දුදනන්
යහපත් ගති ඇති මිනිසුන් - සුදනන්
කිසිම ලෙඩක් නැති - නිරෝගී
ගමේ වාසය කරන - ගැමි
වැඩපල කිරීමට අකැමැති - කම්මැලි

**වයි සෙනබ්**
**සහිරා විදුහල, අනුරාධපුර**



## පරිසර සුන්දරත්වය

පරිසරය යනු අප අවට ඇති වටපිටාවයි. මිහිතලය, වාතය, ගංගා, ඇළ දොළ ඇතුළු ජලධාරා ද සාගරය හා වෙරළ යන මේ සියල්ල පරිසරයේ ම කොටසකි. නෙත්කලු මල් පිපෙන, රසබර පල හැදෙන රමණීය තුරුලතා ද අයත් වන්නේ පරිසරයට ය. එබැවින් පරිසරය ස්වභාව ධර්මය නිර්මාණය කළ අනර්ඝතම දායාදය ලෙස හැඳින්වුව ද වරදක් නැත. මේ පරිසරයෙහි මිනිස් අතින් නිමැවුණු බොහෝ දෑ තිබේ. වැව් අමුණු, වාරිමාර්ග, අභය භූමි, ආගමික ගොඩනැගිලි, නිවාස ආදි සියලු දෑ ද අපේ පරිසරයට අයත් ය. අප හුස්ම ගන්නේ ද පරිසරයේ තිබෙන වාතයෙන් බව අමතක නොකරන්න. මෙතරම් අලංකාර, සුන්දර පරිසරයක වාසය කිරීමට ලැබීම සැබැවින් ම අප ලද භාග්‍යයකි

**ආර් රනා**
**නම්මුවාව මු.ම.වි., නිකවැරටිය**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# සිංහල පිටුව

# මාර්ග නීති පිළි පදිමු

මහා මාර්ගයේ ගමන් කරන අය වෙනුවෙන් මාර්ග නීති සම්මත කර ඇත. එම නීති පිළිපැදීමෙන් බොහෝ අනතුරු වළක්වා ගත හැකිය. රියදුරන් මාර්ග නීති පිළිපැදීමෙන් බොහෝ රිය අනතුරු වළක්වා ගත හැකිය. පදිකයන් ද දකුණු පසින් ගමන් කිරීම කළ යුතුය. පදිකයින් ක්‍රමවත්ව කහ ඉරින් පාර මාරුවීම ද ඉතා වැදගත් ය. මාර්ග සංඥා හා මාර්ග සංඥාපිළිපැදීමට අපි පුරුදු වෙමු. රියදුරන් හා පදිකයින් මාර්ග නීති පිළිපැදීමෙන් රිය අනතුරු වළක්වා ගැනීම ඉතා පහසුවනු ඇත.

**එම්. සයිඩ් අලි**
**පරගහදෙනිය ජාතික පාසල,**
**කුරුණෑගල.**

## ඒක වචන බහු වචන

| ඒක වචන | බහු වචන |
|---|---|
| කිඹුල | කිඹුල්ලු |
| වලහා | වලස්සු |
| කුරුල්ලා | කුරුල්ලෝ |
| ගොනා | ගොන්නු |
| පූසා | පූසෝ |
| එළදෙන | එළදෙන්නු |
| මුවා | මුවෝ |
| බල්ලා | බල්ලෝ |
| බූරුවා | බූරුවෝ |
| අලියා | අලි |
| අශ්වයා | අශ්වයෝ |
| සිංහයා | සිංහයෝ |
| වඳුරා | වඳුරෝ |
| මීයා | මීයෝ |

**එෆ්. රුස්දා**
**ආමිනා ජාතික පාසල, මාතලේ**

# සාමාන්‍ය දැනීම



- වැඩිම ජල පරිමාවක් රැගෙන යන ගඟ
  : ඇමසන් ගඟ
- ලොව උසම කන්ද
  : එවරස්ට් කන්ද
- සාර්ක් සංවිධානය ආරම්භ වූයේ
  : 1985
- ටෙලිෆෝනය නිපදවන ලද්දේ
  : ඇලෙක්සැන්ඩර් ග්‍රැහැම් බෙල්
- බංග්ලාදේශයේ අගනුවර
  : ඩකා
- ශ්‍රී ලංකාවේ ජාතික වෘක්ෂය
  : නා ගස
- හපොළ සංකල්පයේ නිර්මාතෘ
  : ලලිත් ඇතුලත්මුදලි
- ලංකාවේ ප්‍රථම මහ ඇමතිනිය
  : චන්ද්‍රිකා බණ්ඩාරනායක කුමාරණතුංග මැතිණිය
- ලංකාවේ මහා වැව් තැනීම ආරම්භ කළ රජතුමා කවුද
  : වසභ රජු
- ඉන්දියන් සාගරයේ විශාලතම දූපත
  : මැගසින් දූපත

**අස්හර් මොහමඩ්**
**සහිරා විදුහල, අනුරාධපුර.**



## විරුද්ධ පද

| | |
|---|---|
| අලුත් | - පරණ |
| ඉක්මන් | - හෙමින් |
| කඩිසර | - අලස |
| උදය | - සවස |
| බර | - සැහැල්ලු |
| හොඳ | - නරක |
| ඇය | - ඔහු |
| ආරම්භය | - අවසානය |
| සතුට | - දුක |
| නුවණ | - අනුවණ |
| සමගි | - අසමගි |
| වම | - දකුණ |
| උඩරට | - පහතරට |
| ළඟ | - ඈත |
| අහස | - පොළොව |
| බටහිර | - නැගෙනහිර |

රිහා ෆර්මින්
7 වසර,
කළුතර මධ්‍ය මහා විදුහල.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA, PGDE)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்



# التَّلاَمِيْذُ فِيْ الْمَدْرَسَةِ

مَحْمُوْدُ وَسعْدٌ وَسعِيْدٌ إِخْوَةٌ فِيْ أُسْرَةٍ مُتَدَيِّنَةٍ , هُمْ تَلاَمِيْذُ فِيْ الْمَدْرَسَةِ , يقُوْمُوْنَ فِيْ الصَّبَاحِ الْبَاكِرِ , وَيُصَلُّوْنَ فِيْ الْمَسْجِدِ , وَيقْرَأُوْنَ الْقُرْآنَ الْكَرِيْمَ ثُمَّ يتَنَاوَلُوْنَ الْفطُوْر وَيُسلِّمُوْنَ عَلَى وَالِدِهِمْ وَوَالِدتِهِمْ , وَيَذْهَبُوْنَ إِلَى الْمَدْرَسةِ. هُمْ يتَعَلَّمُوْنَ فِيْ الصَّفِّ الْأَوَّلِ وَيَدْخُلُوْنَ الْمَدْرَسَةَ فِيْ السَّاعَةِ السَّابِعَةِ صَبَاحًا. وَيَذْهَبُوْنَ إِلَى فَصْلِهِمْ وَيُسَلِّمُوْنَ عَلَى زُمَلاَئِهِمْ وَيَجْلِسُوْنَ بِأَدَبٍ وَيَدْرُسُوْنَ تِسعَ حِصَصٍ حَتَّى السَّاعَةِ الثَّانِيَةِ ظُهْرًا ثُمَّ يعَوْدُوْنَ إِلَى بيْتِهِمْ فِيْ تَمَامِ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ

---

## الْأَسْئِلَةُ :

مَنْ أَنْتُمْ يَا مَحْمُوْدُ وَسعْدٌ وَسعِيْدٌ ؟

مَتَى تقُوْمُوْنَ ؟

أَيْنَ تُصَلُّوْنَ ؟

هَلْ أَنتُمْ تتْلُوْنَ الْقُرْآنَ الْكَرِيْمَ ؟

هَلْ تُسَلِّمُوْنَ عَلَى وَالِدِكُمْ وَوَالِدَتِكُمْ ؟

مَتَى تَذْهَبُوْنَ إِلَى الْمَدْرَسَةِ ؟

فِيْ أَيِّ صَفٍّ تتَعَلَّمُوْنَ ؟

كَيْفَ تَجْلِسُوْنَ ؟

مَتَى تَعُوْدُوْنَ إِلَى الْبيْتِ ؟

هَلْ تُذَاكِرُوْنَ دُرُوْسَكُمْ ؟

## الْأَجْوِبَةُ

نعَمْ, نُذَاكِرُ دُرُوْسَنَا

نعُوْدُ إِلَى الْبيْتِ فِيْ السَّاعَةِ الثَّانِيَةِ وَالنِّصْفِ نَهَارًا

نَجْلِسُ فِيْ الْفَصْلِ بِأَدَبٍ

نتَعَلَّمُ فِيْ الصَّفِّ الْأَوَّلِ

نَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ صَبَاحًا

نعَمْ, نُسَلِّمُ عَلَى وَالِدِنَا وَوَالِدَتِنَا

نعَمْ, نقْرَأُ الْقُرْآنَ الْكَرِيْمَ

نُصَلِّي فِيْ الْمَسْجِدِ

نقُوْمُ فِيْ الصَّبَاحِ الْبَاكِرِ

نَحْنُ إِخْوَةٌ وَتلاَمِيْذُ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறபுப் பழமொழிகள்

إِنَّ أَخَاكَ مَنْ وَاسَاكَ

உன் சகோதரன் உனக்கு உதவுபவன், உண்மையுள்ள நண்பனுக்கு உதாரணம்
**தமிழ் மரபு:** உண்மையுள்ள நண்பனை ஆபத்தில் அறியலாம்

---

الصَّدِيْقُ عِنْدَ الضِّيْقِ

நெருக்கடியின் போது உதவுபவன் நண்பன்
**தமிழ் மரபு:** உண்மையுள்ள நண்பனை ஆபத்தில் அறியலாம்

---

هُدْنَةٌ عَلَى دَخَنٍ

மோசடி செய்யும் நோக்கில் சகவாசம் கொள்வோருக்கு உரிய உதாரணம்
**தமிழ் மரபு:** அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்

---

قَبْلَ الرِّمَاءِ تُمْلَأُ الْكَنَائِنُ

அம்பெறிவதற்கு முன்னர் அம்புக்கூடுகள் நிரப்பப்பட வேண்டும்
(முன் கூட்டியே தயாராதல்)
**தமிழ் மரபு:** வெள்ளம் வரமுன் அணைகட்ட வேண்டும்

---

رُبَّ أَكْلَةٍ تَمْنَعُ أَكَلَاتٍ

**தமிழ் மரபு:** அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

---

مَنْ يَزْرَعُ الشَّوْكَ لَا يَحْصُدُ بِهِ الْعِنَبَ

(முட்செடியை நாட்டியவன் திராட்சையை அறுவடை செய்ய மாட்டான்)
**தமிழ் மரபு:** தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்

---

مَنْ جَدَّ وَجَدَ

தெண்டித்தவன் பெற்றுக் கொள்வான்
**தமிழ் மரபு:** முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்

---

بَقْبَقَةٌ فِيْ زَقْزَقَةٍ

(தன்னிடம் இல்லாதவற்றை வைத்து பெருமையடித்தல்)
**தமிழ் மரபு:** எடுப்பது பிச்சை, ஏறுவது பள்ளாக்கு

---

جَعَلَ الْحَبَّةَ قُبَّةً

(விதையை வட்டவடி மினாராவாக பெரிதாக்கி விட்டான்)
சிறிய விடயத்தை பெரிது படுத்தல்
அற்ப விடயத்தை ஊதிப் பெருப்பித்தல்

---

مَقْتَلُ الرَّجُلِ بَيْنَ فَكَّيْهِ

மனிதனது அழிவு அவனது இரு தாடைகளுக்கு இடையில் உள்ள நாவினாலாகும்.
**தமிழ் மரபு:** தவனைக்கு தன் வாயால் சாவு

---

أَسْمَعُ جَعْجَعَةً وَلَا أَرَى طِحْنًا

திருகைக்கல் சத்தம் கேட்கிறது. அரைத்த மாவைக் காணவில்லை.
**தமிழ் மரபு:** பெருமைக்கு மா இடித்தல்

## அறபுக்கவிதை

أَضْحَى الْإِسْلَامُ لَنَا دِيْنًا وَجَمِيْعُ الْكَوْنِ لَنَا وَطَنًا

இஸ்லாம் எமக்குரிய மார்க்கமாக மாறியது பிரபஞ்சம் முழுவதும் எமது தேசமாகும்.

---

تَوْحِيْدُ اللهِ لَنَا نُوْرٌ أَعْدَدْنَا الرُّوْحَ لَهُ سَكَنًا

ஓரிறைக் கொள்கை எமக்கு ஒளியாகும். ஏகத்துவம் குடியிருக்கும் இடமாக எமது உயிரையே தயார்படுத்தியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை மாற்றிய உன்னத தலைவர்கள்

உலகம் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என தீர்மானிப்பவர்கள் தலைவர்கள்தான். தமது ஆளுமையினாலும் ஆற்றல்களினாலும் ஒட்டுமொத்த உலகையும் தம்பால் திரும்ப வைத்து, வரலாறுகளின் ஏடுகளில் தமது பெயர்களை அழிக்க முடியாமல் பதித்து விடுகின்றார்கள்.

## முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

இஸ்லாத்தை பின்பற்றுபவர்களின் வாழ்வில் மாத்திரமின்றி, உலகின் ஒவ்வொரு குடி மகனினதும் வாழ்விலும் முஹம்மத் நபியவர்களின் தாக்கம் ஆழமாக ஊடுறுவியுள்ளது. மனிதத்தை மதித்தல், மக்களிடம் சமத்துவத்தை ஏற்படுத்தல், அறிவியல் புரட்சியை ஏற்படுத்தல், சூழலியல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என உலகின் பல நாடுகளாலும் நிறுவனங்களாலும் இன்று கூறப்படும் அனைத்து விதிகளுக்கும் முன்னுதாரணமாக அவர் இருந்ததால், உலகின் திசையை மாற்றியவர்களின் பட்டியலில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முதலிடம் பெற்றார்கள்.



## உமர் பின் கத்தாப் (ரழியல்லாஹு அன்ஹு)



முஹம்மத் நபியவர்கள் கொண்டு வந்த கொள்கைகளின் நிழலில் அசாத்தியமானதோர் அற்புத ஆட்சியை அமைத்ததன் வழியில், உலகின் மிகப் பெரும் தலைவர்களின் வரிசையில் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கொண்டாடப்படுகின்றார். சுமார் பத்து இலட்சம் சதுர மைல்களில் பரவியிருந்த சாம்ராஜ்யத்தை நீதியாக ஆளல், நீதித்துறையை சுதந்திரமாக செயற்பட வழிசெய்தல், ''மக்களின் தலைவன் என்பவன் மக்களின் பணியாளனே'' என்ற கருத்தை செயற்படுத்திக்காட்டல் போன்றவை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சாதனைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆபிரஹாம் லிங்கன்

அமெரிக்காவின் மிக மோசமான கால கட்டத்தில் தோன்றிய மிகச் சிறந்த தலைவராக 16ஆவது ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் கருதப்படுகின்றார். மனிதர்களை மனிதர்கள் அடிமையாக்கி சகிக்க முடியாத சித்திரவதைகளை செய்யும் முறையை அழித்தொழித்தமை அவரது மிகப் பெரிய சாதனையாகும்.



## நெல்சன் மண்டேலோ

தென் ஆபிரிக்காவின் 11ஆவது ஜனாதிபதியாக 1991ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த நெல்சன் மண்டேலாவின் மக்கள் ஆதரவு 2013ஆம் ஆண்டு அவர் இறந்தபோது கடலாக திரண்ட மக்களிடம் இருந்து கசிந்த கண்ணீரில் விளங்கியது.

சமத்துவம், மானிடம் போன்ற உத்தம கருத்துக்களைப் பேசியதால் 27 வருட காலங்கள் ஆங்கிலேயரால் சிறை வைக்கப்பட்ட அவர், இன்றளவும் மனிதத்துவத்தின் சிறப்பான அடையாளமாக போற்றப்படுகின்றார்.



## அப்துல் கலாம்

''கனவு காணுங்கள்'' எனும் தாரக மந்திரத்தால் ஒட்டுமொத்த இந்திய இளைஞர்களையும் கட்டிப்போட்டவர் அப்துல் கலாம் (1931-2015). தனுஷ்கோடி எனும் சிற்றூரில் பிறந்து தன் அயராத முயற்சியாலும் போராட்டத்தினாலும் இந்திய விண்வெளி மையத்தின் தலைவராக உயர்ந்து, இந்தியாவை அணு வல்லரசாக உயர்த்தியதால் மாத்திரம் அவர் மிகச் சிறந்த தலைவராக போற்றப்படவில்லை. மாணவர்களின்பால் தன் ஒட்டுமொத்த கவனத்தையும் குவித்திருந்த அவர், கொண்டு வந்த மாணவ நலன் திட்டங்கள் அவரை ஹீரோவாக்கியிருக்கின்றன.



## தலாய்லாமா

''பௌத்த மக்களின் மதத் தலைவர் தலாய்லாமா'' என அழைக்கப்படுகின்றார். மதம் மற்றும் அரசியல் தலைவராக தலாய்லாமாக்கள் கருதப்பட்டாலும், 1959ஆம் ஆண்டு திபத் நாட்டை சீனா ஆக்கிரமித்ததில் இருந்து அப்பதவி பறிபோனது.

நீதியான தலைமைத்துவம் என்பதற்கு தலாய்லாமா மிகச் சிறந்த அடையாளமாகும். முஸ்லிம்களுக்கும் தீவிரவாத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் பர்மாவின் முஸ்லிம்களுக்கு நடந்த அநீதிகளை பகிரங்கமாக கண்டித்து பேசியும் தனக்கான முத்திரையை மக்கள் மனதில் ஆழமாக பதித்துக் கொண்டார்.

## அடுத்தது?

ஒட்டுமொத்த உலகையும் திரும்பிப் பார்க்க வைக்கப்போகும் அடுத்த தலைவர் நீங்களே தான், அதில் சந்தேகமில்லை. வரலாற்றின் திசையை மாற்றும் வல்லமை உங்களுக்குள்தான் மறைந்திருக்கின்றது. அவ்வாறான சாதனையாளர்களாக உங்களை உயர்த்துவதைத்தான் அகரம் இதழ் தனது இலக்காக கொண்டிருக்கின்றது.

**சாதிக்க நீங்கள் தயாரா?**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒரு கோப்பைக் கனவுகள்

அம்மாரா நசீர்

மதிய நேரம். சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது தன் தோட்டத்து அந்தூரியன்களுக்கும் ஓர்கிட்டுக்களுக்கும் இடையே வளர்ந்திருந்த புற்களை பிடுங்குவதிலும் விழுந்து கிடந்த இலைகளை அப்புறப்படுத்துவதிலும் பிஸியாக இருந்தாள் கதீஜா.

''ட்ரீங்... ட்ரீங் ராத்தா போஸ்ட்''

தபால்காரனின் சத்தம் கேட்டவுடன் தன் முந்தானையை சரி செய்து கொண்டு கதீஜா விரைந்து வந்தாள்.

''இங்கால ஒரு சைன் போடுங்க ராத்தா''

வந்திருப்பது ஒரு சாதாரண கடிதம் அல்ல என்பதை ஊகித்துக் கொள்வதில் கதீஜாவுக்கு சிரமங்கள் இருக்கவில்லை. கடித்தத்தை எடுத்துக் கொண்டு நேராக வீட்டினுள்ளே சென்றவள், ஜன்னலை திறந்து விட்டு அருகிலிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். என்னவாக இருக்கும்? என்ற சந்தேகத்துடனே கடிதத்தை பிரித்தன கதீஜாவின் கரங்கள்.

''அல்ஹம்துலில்லாஹ், அல்ஹம்துலில்லாஹ்'' அவளை அறியாமலே அவளது உதடுகள் முணுமுணுத்தன.

''மகள்... மகள்! ஷானாஸ் மகள்'' என்று கூவிக்கொண்டே மகளிடம் கடிதத்தை காட்ட ஓடிய கதீஜாவுக்கு அருகிலிருந்த நாற்காலியில் கால் அடிபட்டபோது தன் மகள் வீட்டில் இல்லை என்றும் அதிபரின் வேண்டுகோளின் படி உயர் தர வகுப்புப் பிள்ளைகளுக்கு பாடமெடுப்பதற்காகப் பாடசாலைக்கு போயுள்ளாள் என்பதும் நினைவுக்கு வந்தன.

''என் முயற்சியெல்லாம் நீ வீணடித்து விடவில்லை ரப்பே! நீ மிகவும் பெரியவன்'' என்றவளாக உட்கார்ந்து மீண்டும் கடிதத்தை விரித்தாள் கதீஜா.

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஸீல் குத்தப்பட்ட அந்தக் கடித்தத்தில் வந்திருந்த விடயம் இதுதான்.

செல்வி ஷானாஸ்,

2016 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் நீங்கள் பெற்ற புள்ளியின் அடிப்படையில் நீங்கள் விண்ணப்பித்த பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய பீடத்தில் உள்ள பாடநெறிகளை கற்பதற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

மேலும், 2018.09.16 ஆம் திகதி பல்கலைக் கழகத்திற்கு சமுகமளித்து பதிவு செய்து கொள்ளும் படியும் வேண்டிக் கொள்கிறேன்.

வாசித்து முடித்த கதீஜாவின் மனதில் அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டும் கூட தனக்கும் இவ்வாறெல்லாம் வழிகாட்ட யாரும் இருக்கவில்லை என்ற கவலை அவளை ஆட்கொள்ள, தனது இளம்பராயத்தை அசைபோட துவங்கினாள் கதீஜா.

* * * * * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோர மாவட்டமொன்றின் நடுத்தர குடும்பமொன்றில் மூத்த பிள்ளையாக பிறந்தவள்தான் கதீஜா.

அவளது தந்தை பற்றி அவளுக்குள் இருக்கும் நினைவுகள் எல்லாம் ''பொருந்திய கைக்கூலிய தாரதற்கு வக்கில்லாத உன்னோட எல்லாம் குடும்பம் நடத்தேலாது'' என்று கத்திவிட்டு நிறைமாத கர்ப்பிணியாக இருந்த கதீஜாவின் உம்மாவையும் அவளையும் தன்னந்தனியே தவிக்க விட்டு சென்ற அந்த தினத்திற்குரியவைதான்.

தனது ஏழு மாத பாலகனையும் கதீஜாவையும் தனது தங்கச்சியிடம் ஒப்படைத்து விட்டு வெளிநாடு போகிறார் கதீஜாவின் உம்மா.

''சாச்சி உம்மா எப்பக்கி வருவாங்க சாச்சி?'' என்று ஒவ்வொரு நாளும் கேட்டுக் கொண்டே பதினொரு வயது வரை வளர்ந்தாள் கதீஜா. பருவப் பெண்ணான கதீஜாவுக்கு ஒழுங்கான மார்க்கத்தையும் அறிவையும் வழங்க வேண்டும் என்பதற்காக அநாதரவான பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் ஒரு நிறுவனத்தில் போடிங் பண்ணப்படுகிறாள் கதீஜா!

அந்த வளாகத்தில் தனது பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக அரபு, ஷரீஆ மற்றும் ஸீரா போன்ற கற்கைகளையும் முனைப்புடன் பெறுகிறாள் கதீஜா. இயல்பாகவே அவளிடம் இருந்த புன்னகையும் குறும்புத்தனமும் அங்கிருந்த ஒவ்வொருவரின் மனதிலும் அவளுக்கென்று ஒரு தனியிடத்தை பிடித்துக் கொள்கிறது. அங்கே இறுதி வருடத்தை கற்றுக் கொண்டிருக்கும்போது திடீரென ஒருநாள் அவளின் சாச்சி வருகிறாள்.



''புள்ளேய்! ஒனக்கும் 18 வயதாகின்றது. நல்லது கெட்டது தெரியும், நல்ல விஷயமொன்று வந்திருக்கு. என்னா கொஞ்சம் அவசரம்...!'' என்று சாச்சி இழுக்கும் போதே...

''இல்ல சாச்சி எனக்கு இப்பவே வேணாம்... நான் படிக்கோனும்... சமூகத்துக்கு ஏதாவது செய்யனும். இப்பவே வேணாம் சாச்சி.''

''பொத்து வாய! நீ படிச்சதெல்லாம் போதும். சமூகமும் தேவல்ல சாராயமும் தேவல்ல! எவ்வளவு நாளக்கித்தான் நாங்களும் கொமரு காக்க? மரியாதயா பொட்டிய கட்டு!'' எரிந்து விழுந்தாள் கதீஜாவின் சாச்சி.

தன் அன்பு சாச்சி இவ்வாறு பேசிட்டாவே என்று நொந்து கொண்டாலும் இனிமேலும் இவர்களுக்குத் தான் பாரமாய் இருக்கப் போவதில்லை என்ற முடிவுடன் தன் கற்கையை கைவிட்டு விட்டு திருமணத்திற்கு சம்மதித்தாள் கதீஜா.

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த ஆரவாரமில்லாத இளைஞனான அன்ஸார் எந்தவிதமான கைக்கூலியோ, சீதனமோ இல்லாமல் கதீஜாவை கரம் பிடித்தான். அன்ஸார் - கதீஜா தம்பதி நான்கு பிள்ளைகளுக்குப் பெற்றோராயினர். தம் வாழ்வில் இடையிடையில் பொருளாதார கஷ்டங்கள், நோய்நொடிகள், இழப்புக்கள் என்று என்ன துன்பங்கள் வந்தபோதும் இருவரும் ஒத்துழைத்து சகித்துக் கொண்டு வெளியே வந்தனர். இருந்தாலும் அவர்கள் ஒரு செழிப்பான வாழ்க்கையை வாழவில்லை என்பதுதான் உண்மை. எனினும், தம் பிள்ளைகளால் எப்போதாவது ஒரு நாள் செழிப்பான வாழ்க்கை வாழ்வோம் என்று மட்டும் அசையாமல் நம்பியிருந்தனர்.

* * * * * *

''அஸ்ஸலாமு அலைக்கும் உம்மா! ஏ உம்மா அழுவுறீங்க?'' என்று கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்த ஷானாஸின் சத்தத்தில் சுய நினைவுக்கு வந்த கதீஜா, ''ஒண்டுமில்ல மகள்'' என்றவாறே கடிதத்தை நீட்டினாள். கடிதத்தைக் கண்ட ஷானாஸ் உம்மாவை ஆரத் தழுவினாள்.

ஒரு சில வினாடிகளில் சுதாகரித்துக் கொண்டு வெளிநாட்டில் இருக்கும் தனது மகனுக்கு செய்தியை எத்திவைக்க லேன்போன் வைக்கப்பட்டிருந்த மேசையை நோக்கி விரைந்தாள் கதீஜா!

**அடுத்த இதழில்...**

**எப். தமீனா தமீம் (ஜீலான் ம.க., பாணந்துறை) எழுதிய ''மனக்கீறல்கள்'' எனும் சிறுகதை பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- Every Journey begins with a single step -

சரும நோய்களுக்கு நிரந்தர தீர்வு, ஆரோக்கிய ஹேர்பல் புத்தாக்கத்தின் இலங்கையின் இளம் மருத்துவ கண்டுபிடிப்பாளனும், பாரம்பரிய ஆயுர் வேத மருத்துவ மாணவனுமான எம்.டீ.எம். ஸகீ லதீப் அவர்கள், 2018ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆசியா ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சி விருது வழங்கும் நிகழ்வில் இரு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக் கப்பட்டார்.

குருநாகல் மாவட்டத்தின், தேதிலி அங்க, இப்பா கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஸகீ லதீப் **(M.D.M. Zacki Latheef)** சர்வதேசத்தில் தனது கண்டுபிடிப்புக் கென ஓரிடத்தை தக்கவைத்துக் கொண்ட எமது நாட்டின் ஓர் இளம் கண்டுபிடிப்பாளராக மிளிர் கின்றார். தற்போது 23 வயதை தொட்டுள்ள இவர் தனது புத்தாக்க முயற்சியை தனது பதினாறாவது வயதில் தனது உயர்தர வகுப்பிற்கான தனிச் செயற்றிட்ட முயற்சியாக ஆரம்பித்தார். தனது கல்வி யினை க.பொ.த. சாதாரண தரம் வரை மடிகே முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், உயர் தரத்தினை பறகஹதெனிய தேசிய பாடசாலையில் பயின்ற இவர் தற்போது **College of health science** தனியார் மருத்துவ நிறுவன மொன்றில் பாரம்பரிய ஆயுர் வேத மருத்துவ மாணவனாக கல்வி பயின்று வருகின்றார்.



# நீங்கள் ஒரு கண்டுபிடிப்பாளரா?

## ஸகீ லதீப்

**சந்திப்பு: நபீல் அபாபீல்**

**அகரம்: நாம் ஒரு பொருளை கண்டுபிடித் தால் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய சில வழிகாட்டல்களை மாண வர்களுக்கு வழங்க முடியுமா?**

**ஸகீ லதீப்:** நமது கண்டுபிடிப்பானது பூரணத்துவம் அடையும் வரை திரும்ப திரும்ப வடிவமைப்பது அவசியமாகும். சந்தைப்படுத்தும்போது மக்களை கவரும் வகையிலும் அதன் தோற்றம் அமைந்திருக்க வேண்டும். அதன் பின்னரே நாம் அதனை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும்.

டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தில் காப்புரிமையை பெற்றுக் கொள்ள வேண்டும். அதேநேரம் அந்த கண்டுபிடிப்புடன் சம்பந்தமான அரசால் பிரேரிக்கப்பட்ட ஆய்வுகள், ஆராய்ச்சி கள் இருந்தால் அதை மேற்கொள்ள வேண்டும். மருத்துவ கண்டுபிடிப்புக்கள் என்றால் இந்த படிமுறை அத்தியாவசியமானதாகும். அந்த கண்டு பிடிப்புடன் தொடர்பான அமைச்சுக்கள், திணைக் களங்கள் இருந்தால் அங்கு பதிவுகளை பெற்றுக் கொள்ளல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம்: வருடாந்த தேசிய கண்டுபிடிப்பாளர் கண்காட்சி**

**ஸகீ லதீப்:** இது கண்டுபிடிப்பாளருக்கு அடிப் படையாகும். நிதிப் பரிசுகளும் தேசிய, சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதோடு. ஊடகங்களின் பார்வையும் நம் பக்கம் திரும்பும். அதேவேளை தற்காலிக அடையாள அட்டை அங்கு கிடைப்ப துடன் காப்புரிமை பெற்றிருந்தால் நிரந்தர அங் கத்துவ அடையாள அட்டையையும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையின் அனைத்து அரச அலுவலகங்களிலும் மிக பெறுமதியானதாக மதிக்கப்படும் இந்த அடையாள அட்டை எமது கண்டு பிடிப்புத் துறைக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

இதில் மருத்துவ துறையுடன் தொடர்பான கண்டுபிடிப்புக் களை கொண்டவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். மக்களின் வாழ்வோடு நேரடியாக தொடர்புபடும் துறை என்பதால் அங்கு கண்டுபிடிப்பாளருக்கு கூடிய பொறுப்பு இருக்கின்றது.

**அகரம்: எமக்குள் மறைந்தி ருக்கும் கண்டுபிடிப்பு ஆற்றலை வெளிக்கொண்டு வருவது எவ்வாறு?**

**ஸகீ லதீப்:** சிலருக்குள் இயல்பாகவே அமைந் திருக்கும் கண்டுபிடிப்பு ஆற்றலை வெளிக்கொண்டு வர நாம் பின்வரும் சில முயற்சிகளை மேற் கொள்ளலாம்.

1. புதியவற்றை விரும்புதல்
2. மாற்றுச் சிந்தனையை வளர்த்துக் கொள்ளல்
3. பல கோணங்களில், கேள்வி லாவகத்தில் அனைத் தையும் அணுகக் கூடியவராக இருத்தல்
4. நாம் தெரிவு செய்த துறை பற்றிய அறிவை வளர்க்க தேடிக் கற்றல்
5. புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்த அயராது போராடல், தோல்விகளில் இருந்து பாடம் கற்றல், விடாமுயற்சியை வித்திடல், தொடர்ந்து முயற்சி செய்தல்
6. சூழலில் நடைபெறுவதை அவதானித்தல், தொழில்நுட்ப கோளாறுகளுக்கு தீர்வுகளை தேடல், கழிவு முகாமைத்துவத்தில் அடுத்த கட் டத்தை நோக்கி நகருதல் போன்றன எமக்குள் மறைந்திருக்கும் புத்தாக்க சிந்தனையை நோக்கி நகர்த்தலாம். எமது புதிய கண்டுபிடிப்புக்களுக்கு வழியமைக்கலாம்.

ஏற்கனவே உள்ள கருவியை எவ்வாறு இன்னும் இலகுபடுத்தலாம்? அல்லது அதற்கு எவ்வாறு இன்னும் அதிகமான வசதிகைள சேர்க்கலாம்? அதனுடைய குறைகளை எவ்வாறு நீக்கலாம் போன்ற இடையறா சிந்தனைகள் எம்மையும் நிச்சயம் சாதனையாளனாக்கும்.



**அகரம்: புத்தாக்க சிந்தனையாளர்களிடம் காணப் பட வேண்டிய ஒழுக்கவியல் பண்புகள் எவை?**

**ஸகீ லதீப்:** எமது கண்டுபிடிப்புக்கள் எப்போதும் மானிடத்தின் புன்னகையை பாதுகாப்பதாகவும், மனித குலத்திற்கு நன்மை பயப்பதாகவும், உலகின் நிலவுகைக்கு உத்தரவாதம் தரக்கூடியதாகவும் அமைய வேண்டும்.அதற்கு மாற்றமாக, அழிவால் மக்களை அச்சமூட்ட கூடியதாகவோ நாசகார தன்மை கொண்டதாகவோ அமையக் கூடாது.

**அகரம்: கண்டுபிடிப்புத்துறையில் காப்புரிமை எவ்வாறு முக்கியப்படுத்தப் படுகின்றது?**

**ஸகீ லதீப்:** எமது கண்டுபிடிப்பின் உரிமை யாளர் நாம்தான் என்பதற்கு உள்ள ஒரேயோர் ஆதாரம் பேட்டன்ட்- காப்புரிமைதான். ஆகவே, நாம் கண்டுபிடிப்பை செய்ததன் பின்னர் செய்ய வேண்டிய முதலாவது கடமை இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தில் அதனை பதிவு செய்வ தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலக எழுத்தறிவு தினம் - செப்டெம்பர் 08

உலக எழுத்தறிவு தினத்தை யுனஸ்கோ நிறுவனம் நவம்பர் 17, 1965 அன்று பிரகடனம் செய்தது. இத்தினம் 1966 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் உலக மக்களின் எழுத்தறிவின்மையை குறைப்பதாகும். எழுத்தறிவின்மை என்பது ஒரு மொழியை எழுதவும் படிக்கவும் தெரியாமல் இருப்பது. இதையே எழுத்தறிவின்மை என்று ஐ.நா. வரையறுத்துள்ளது.

ஐ.நா.வின் கூற்றுப்படி உலகில் சுமார் 781 மில்லியன் வயது வந்தோர் அடிப்படை எழுத்தறிவு இல்லாமல் உள்ளனர். அதில் 3 இல் 2 பங்கினர் பெண்கள். அத்தோடு, 103 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர். வயது வந்தோரில் 5 பேரில் ஒருவருக்கு எழுத-வாசிக்கத் தெரியாது எனவும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. சர்வதேச எழுத்தறிவு தினத்தின் இவ்வருடத்திற்கான தொனிப்பொருளாக "எழுத்தறிவும் திறன் அபிவிருத்தியும்" (Literacy and skills development) என்பதாகும்.




**அயாத் அஹமட்**

## உலக ஓசோன் தினம்
### செப்டெம்பர் - 16




ஓசோன் படலம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக, ஐ.நா. சபை ஒவ்வோர் ஆண்டும் செப்டெம்பர் 16 ஆம் திகதியை ஓசோன் தினமாக கொண்டாடுகிறது. ஓசோன் என்பது ஒட்சிசனின் ஒரு வடிவம் ஆகும் ($O_3$). அதாவது, மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்து ஒரு ஓசோன் மூலக்கூறு ஆகும். ஓசோனானது பூமிக்கு மேலே வாயுமண்டலத்தில் ஸ்ட்ரேடோஸ்பியரில் 10-50 கி.மீ. தொலைவில் காணப்படுகிறது. ஸ்பெக்ரோபோட்டோ மீற்றர் என்ற கருவியைக் கொண்டு பூமியில் இருந்து ஓசோனை அளக்கலாம். ஓசோனின் முக்கிய பணியே சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களைத் தடுத்து பூமியில் உள்ள உயிர்களைப் பாதுகாக்கிறது.

**ஓசோன் இழப்பினால் ஏற்படும் விளைவுகள்:**

ஓசோன் இழப்பால் அதிகமான புற ஊதா கதிர்கள் பூமியை வந்தடைவதால் மனிதனுக்கு தோல் புற்றுநோய், கண்பார்வை குறைபாடு, நோய் தடைக் காப்பு மண்டலம் செயலிழப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும். இறுதியாக மனித இனமே புவியில் இருந்து அழிந்து விடும். புவியில் உள்ள அனைத்து தாவரங்களிலும் பச்சையங்கள் பாதிக்கப்பட்டு, விளைச்சல் இல்லாமல் தாவர இனமே அழிவை சந்தித்து விடும். நீர் மற்றும் நிலத்தில் வாழும் விலங்குகள் இறக்க நேரிடும். இதனால் புவியில் உணவுச் சங்கிலி பாதிக்கப்படும்.

**ஓசோன் படலத்தில் ஏற்படும் இழப்பைத் தடுக்கும் முறைகள்:**

ஓசோன் படலத்தை பாதிக்கச் செய்யும் முக்கிய வாயு குளோரோ ப்ளுரோ கார்பன்கள் (CFC) ஆகும். பதிலாக ஹைட்ரோ குளோரோ ப்ளுரோ கார்பன்கள் (HCFC) ஹைட்ரோ ப்ளுரோ கார்பன்கள் (HFC), ஹைட்ரோ கார்பன்களான பியுட்டேன் புரோபேன் போன்றவற்றையும், அம்மோனியா நீர் மற்றும் நிராவி போன்றவை மாற்று பொருளாக பயன்படுத்தப்படலாம். ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருட்களை உற்பத்தி செய்வதை தடை செய்யவோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கடுமையான வரைமுறைகளைக் கொண்டு வரலாம். குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் போன்றவற்றின் பயன் பாட்டை வெகுவாக குறைப்பதன் ஊடாகவும் ஓசோன் படலத்தைப் பாதுகாக்கலாம். மிக முக்கி யமாக புவியில் அதிகமான மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் ஓசோன் படல இழப்பைக் குறைக்கலாம்.

## உலக சமாதான தினம்

**செப்டெம்பர் 21**




உலக அமைதி நாள் (International Day of Peace) ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் பிரகடனத் தின் மூலம் ஆண்டு தோறும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி கொண்டா டப்பட்டு வருகிறது. இத்தினம் 1981 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் செப்டெம்பர் மாதம் மூன்றாம் செவ்வாய்க்கிழமை கொண்டாடப் பட்டு வந்தது. 2002 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தினம் செப்டெம்பர் 21 ஆம் திகதியில் கொண்டாடப் படுகிறது.




உலக மக்கள் அனைவரும் யுத்தமின்றி நிம்ம தியாக தமது நாடுகளில் வாழ வேண்டும் என்பதை வலிறுத்துவதும் இத்தினத்தின் முக்கிய விடயங் களில் ஒன்றாகும்.

## உலக சுற்றுலா தினம்

**செப்டெம்பர் 27**

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத் தில் சுற்றுலாத்துறை முதன்மையானது என்பதை வலிறுத்தும் நோக்குடனேயே உலக சுற்றுலா தினம் நினைவு படுத்தப்படுகிறது. இத் தினம் 1970 ஆம் ஆண்டு ஐ.நா. சபை அங்கீகரித்து அறிவித்தது. அவ்வகை யில் உலக சுற்றுலா தினம் உலக சுற்றுலா நிறு வனத்தின் (WTO) ஆதரவில் 1980 இல் இருந்து கொண் டாடப்பட்டு வருகிறது. இப்போது சுற்றுச்சூழல்







சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, கலாசார சுற்றுலா, கல்விச் சுற்றுலா என பல வகைகளாகப் பிரிந்து வளர்ந்துள்ளது. மலைகள், நீர்வீழ்ச்சி, தீவுகள், உலக அதிசயங்கள், கட்டடங்கள், கேளிக்கை பூங்காக்கள், கடற்கரை என உலகில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்கள் காணப்படுகின்றன. இவ்வருடத்திற்கான உலக சுற்றலா தினக் கருப் பொருள் (Tourism and the Digital Transformation) என்பதாகும்.

### இலங்கைக்குரிய பறவைகள்



இவை இலங்கைக்கு உரித்தான சிறிய ஆந்தை இனங்களாகும்.

- சிறிய ஆந்தை
- விஞ்ஞானப் பெயர்: Glaucidium castanonotum



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி, BA) | பணிப்பாளர், பிஸ்மி கிண்டகாடன், காத்தான்குடி



# எடுத்த காரியத்தை முடித்தே விடு!

**''தடைக்கற்களை படிக்கற்களாக்குங்கள்... சுமைகளை சுகங்களாக்குங்கள்... சவால்களை சந்தர்ப்பமாக்குங்கள்... வேதனைகளை சாதனைகளாக்குங்கள்... தொட்ட காரியத்தை இடையில் விட்டு விடாமல் தொடருங்கள்...''**

அந்தப் போர்க்கப்பல் ஜஸீரா தீவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதன் தளபதி காயித் மிகவும் நிதானமாக தன் படையினருடன் சென்று கொண்டிருந்தார். காயித் வீரம் மிக்க ஓர் இளைஞர். சின்ன வயதில் இருந்தே தன் தந்தையின் ஊக்குவிப்பிலும் பயிற்றுவிப்பிலும் வளர்ந்தவர். ''எடுத்த காரியத்தை முடித்து விடு'' என்பதுதான் காயிதின் தந்தை அடிக்கடி சொல்லும் வார்த்தை. இதனால் காயித் மிகவும் விடா முயற்சி உள்ளவனாக வளர்ந்தான். ஒரு காரியத்தில் இலக்கு வைத்துவிட்டால் அதனை முடிக்காமல் அவன் ஓயமாட்டான்.

ஒருமுறை சிறுவயதில் காயிதை அவரது தந்தை கடற்கரைக்கு அழைத்துச் சென்று தூரத்தில் தெரியும் ஜஸீரா தீவை காட்டினார்.

''மகனே காயித்... அதோ அங்கு தெரியும் தீவுதான் நமது ஊர். அங்கிருந்து நாங்கள் அநியாயமாக துரத்தப்பட்டோம். எங்களுடைய சொத்துக்களை விட்டுவிட்டு அகதிகளாக இந்த ஊருக்கு வந்தோம். நமது தீவை நாம் மீட்க வேண்டும். அதற்கு ஒரு நல்ல தளபதி வேண்டும். அது நீயாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்'' என்றார்.

அன்று முதல் ஜஸீரா தீவை மீட்பதை தன் இலக்காக மாற்றிக் கொண்டான் காயித். கடற்கரை செல்லும் போதெல்லாம் தன்னை ஒரு தளபதியாக எண்ணிக் கொள்வான். குதிரையோட்டத்தையும் வில்வித்தையையும், போர்க்கலைகளையும் பயின்று கொண்டான். இப்போது அதனை மீட்பதற்காக ஒரு கப்பல் முழுக்க போர்வீரர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கிறான்.

கப்பல் ஜஸீரா தீவை நெருங்கியதும் பொருட்களை எல்லாம் இறக்கி விட்டு கரையோரத்தில் முகாமிட்டு விட்டு திடீரென தான் பயணித்து வந்த கப்பலுக்கே தீ வைத்தார் தளபதி காயித். திடுக்கிட்டுப் போன படைவீரர்களைப் பார்த்து,

''வீரர்களே! எடுத்த காரியத்தை முடிக்காமல் நாம் ஓயக் கூடாது. நம்மால் தப்பித்துப் போக முடியாது. பின்னால் ஆர்ப்பரிக்கும் கடல். முன்னால் பலம் மிக்க எதிரிகள் உள்ளனர். பொறுமையாக போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒன்று, வீரத்துடன் போராடி இலக்கை அடைவோம். இல்லையேல், எதிரிகளால் வெட்டப்பட்டு இங்கேயே மடிவோம். என்னைப் பொறுத்தவரை நான் இங்கு வாழ வந்திருக்கிறேன். திரும்பிப் போக எனக்கு கப்பல் தேவையில்லை'' என்றார். இதனைக் கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களுக்குள் ஓர் உத்வேகம் பிறந்தது. அடுத்த நாள் போராட்டம் ஆரம்பித்தது.

காயிதின் படை வீராவேசத்தோடு போராடி னாலும் ஜஸீராவாசிகளுக்கு முன் தாக்குப்பிடிக்க முடியாமல் தோற்றுப் போனது. படை சற்று பின் வாங்கி ஒரு காட்டுக்குள் நுழைந்தது. படைவீரர்கள் சோர்ந்து போயினர். வெல்வதற்கும் வழியில்லை. திரும்பிச் செல்வதற்கும் வழியில்லை என அங் கலாய்த்தனர். காயித் விடவில்லை. மனதால் தோற்றுவிடுவோம் என அஞ்சும் தன் படை வீரர்களைப் பார்த்து பேச ஆரம்பித்தார்...

''நண்பர்களே! சோர்ந்து விடாதீர்கள். எடுத்த காரியத்தை முடித்தே விடுவோம். உறுதி பூணுங் கள். இந்த மரத்திலுள்ள தூக்கணாங் குருவியைப் பாருங்கள். அதனிடம் விடா முயற்சியைக் கற்றுக் கொள்ளுங்கள். அது கட்டியிருக்கம் இந்த அழகான தலைகீழ் கூட்டைப் பாருங்கள். எத்தனை நாள் முயற்சி. குச்சிகளினால் கட்டிய இந்தக் கூடு காற்றுக் கும் மழைக்கும் எத்தனை முறை இடிந்து விழும். அப்போதெல்லாம் தூக்கணாங் குருவி சோகத்தில் அழுவதில்லை, தற்கொலை செய்வதில்லை. மீண்டும் புதிய குச்சிகளை சேகரித்து வந்து கூடு கட்ட ஆரம்பிக்கும். ஒரு குருவியால் முடியும்போது நம்மால் முடியாதா!'' என்றார்.

வீரர்களின் உள்ளத்தில் மீண்டும் புத்துணர்ச்சி... காட்டுக்குள் கடுமையான பயிற்சி செய்து சில நாட்களின் பின் மீண்டும் போர்... இம்முறை இரு படைகளிலும் சம இழப்புகள்தான். ஆனாலும், காயிதின் படை மீண்டும் தோல்வியே அடைந்தது. சற்று பின்வாங்கி ஒரு மலையில் தஞ்சமடைந்தனர். வீரர்களில் சிலர் இறந்து போனதாலும் மீண்டும் தோல்வி என்பதாலும் வீரர்களின் உள்ளத்தில் நம்பிக்கையீனம் துளிர்விடத் தொடங்கியது.

ஆனாலும், காயித் சோர்ந்துபோகவில்லை. முயற்சி என்பது மூச்சு நிற்கும் வரை என உறுதியாக நம்புபவர் அவர். தன் வீரர்களிடம் நம்பிக்கையோடு பேச ஆரம்பித்தார்...

''நாம் வெற்றிக்காக போராடும்போது வீண் முயற்சி போல் தோன்றும். ஆனால், நாம் வென்ற பின்னர் விடாமுயற்சி எனத் தோன்றும். தோல்வி என்பது நம்மைத் தூங்கவைக்கப் பாடப்படும் தாலாட்டல்ல, நம்மை நிமிர்ந்து நிற்க பாடப்படும் உணர்ச்சிக் கீதம்... முடியும் என்றால் முயற்சி செய் வோம். முடியாது என்றால் பயிற்சி செய்வோம். முயற்சி என்பது விதை போல. அதை விதைத்துக் கொண்டே இருப்போம். அது முளைத்தால் மரம். இல்லாவிட்டாலும் அது மண்ணுக்கு உரம். நமது முயற்சிகள் தவறலாம். ஆனால், நாம் முயற்சிக்கத் தவறக் கூடாது நண்பர்களே! அலட்சியங்களை ஓரம் கட்டிவிட்டு இலட்சியத்தோடு பயணிப்போம். விழுவது இருமுறை... ஆனாலும் எழுவது மும் முறையாகட்டும்.. தோற்பதும் வீழ்வதும் அவமான மல்ல. பலமுறை விழுந்ததால்தான் மழைத்துளி களும் ஆறாகின்றன. நபிகளாரின் விடாமுயற்சி தான் யத்ரிபை மதீனாவாக்கியது. எடிசனின் ஆயிரமாவது முயற்சிதான் உலகத்தின் இருளை வெளிச்சமாக்கியது! விதைக்குள்ளேயே இருந்து விட்டால் ஆலமரங்கள் ஏது. முட்டைகளுக்குள் ளேயே முயற்சிக்காமல் முடங்கிவிட்டால் பறவை களுக்கு உயிர் வாழ்க்கை ஏது?''

காயிதின் நம்பிக்கை வார்த்தைகள் வீரர்களின் உள்ளத்தில் அம்பாகப் பாய்ந்தன. என்ன ஆனாலும் உயிரே போனாலும் போராட்டத்தில் பின் வாங்கு வதில்லை என்ற உறுதியோடு மறுநாள் மீண்டும் போராட்டத்தில் குதித்தனர்.

இம்முறை சிறப்பாக போராடிய காயிதின் படை யினர் இறுதியில் ஒரு குகைக்குள் அகப்பட்டுக் கொண்டனர். எதிரிகள் குகை வாயிலை பெரும் கல்லைக் கொண்டு மூடிவிட்டனர். குகையைச் சுற்றி ஜஸீரா வீரர்கள் சூழ்ந்து காயிதின் படையை முற்றுகையிட்டனர். இத்தோடு நம் கதை முடிந்தது என காயிதின் படைவீரர்கள் நினைத்தனர். காயிதும் குகையின் ஒரு மூலையில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது அனைவரின் கவனத் தையும் வரிசையாக அணிவகுத்துச் சென்ற எறும்புகள் ஈர்த்தன. ஒவ்வோர் எறும்பும் தன் வாயில் சற்று நீளமான உணவுப் பொருள் ஒன்றை தூக்கிச் சென்று கொண்டிருந்தது. குன்றுக்கு மேல் உள்ள தன் கூட்டுக்கு அதனை எடுத்துச் செல்வதே எறும்புகளின் நோக்கம். ஆனால், செல்லும் வழி யில் ஒரு வெடிப்பு, சிறு விரிசல் தென்பட்டது. அதனால் எறும்புகள் அந்தத் தடையை தாண்ட முடியாமல் தவித்தன. எறும்புகள் பலமுறை முயற்சித்தும் அவற்றால் விரிசலைத் தாண்ட முடியவில்லை. அனைத்து எறும்புகளும் இனிமேல் நம்மால் இந்த தடையைத் தாண்ட முடியாது என நினைத்து திரும்பிச் செல்ல முடிவெடுத்தன.

**38 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## பாடம் - 28

# கணினியின் சிறப்புப் பண்புகள்

கணினி அனைவராலும் பரிச்சயமாகி விட்ட ஒரு சாதனமாகும். கணினியின் பயன்பாடு விரிந்தது, பரந்தது. கல்வி, ஆய்வு, பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் **(Problem Solving)**, பொழுதுபோக்கு **(Entertainment)**, வணிகம், சொந்த நிர்வாகம் **(Personal Management)** என பல்துறைகளிலும் பயன்படுத்தப் படுகின்றது. கணினியானது பயநர் தோழமையுடன் **(User freindly)** பயன்படும் உபகரணமாக காணப் படுவதனால் பயநர்விரும்பி பயன்படுத்தும் நண்பனாக மாறி விட்டது.

**கணினி என்பது;**

1. கணினி ஒரு மின்னணுச் சாதனம் **(Electronic Device)**
2. கணினி ஒரு தகவல் செயலாக்க இயந்திரம் **(Information Processing Machine)**

எனவே, அதனை பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்த முடியும்:

பயநரினால் **(User)** உள்ளிடப்படும் தரவுகளைப் **(Data)** பெற்றுக் கொண்டு, அத்தரவுகளைப் பயநரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கேற்ப **(instructions)** முறைவழிப்படுத்தி **(Processing)**, தகவல்களாக **(Information)** வெளியிடும் மின்வலுவினால் இயக்கப்படும் உபகரணம் கணினி எனப்படும்.

இச்செயற்பாட்டில் ஐந்து விடயங்கள் தொடர்பு படுகின்றன. எனவே, இவை ஐந்தினதும் இணைப்பாக **(intergration)** கணினியின் வெளியீடு காணப் படும்.

01. பயநர்- **User**
02. தரவு - **Data**
03. அறிவுறுத்தல்கள் - **instructions**
04. முறைவழிப்படுத்தல் - **Processing**
05. தகவல் - **Information**



கணினி பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதனாலேயே அது மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் தேவையான மிக முக்கிய அம்சமாக மாறியுள்ளது. அதேவேளை, அதன் பிரபல்யமும் பயன்பாடும் வியாபித்துள்ளமைக்குக் காரணமும் அதன் சிறப்பியல்புகளாகும். எனவே, அதன் சிறப்பியல்புகள் சிலவற்றை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வேகம் | (Speed) |
| செம்மை | (Accuracy) |
| நம்பகத்தன்மை | (Reliability) |
| செயற்திறன் | (Capability) |
| தகவற் கொள்ளளவு | (Storage Capacity) |
| திறன் | (Efficiency) |

**வேகம் (Speed):**

கணினியாது கணித்தல் -**Arithmetic** (கூட்டல், கழித்தல், பெருக்குதல், பிரித்தல்) மற்றும் தருக்க -**Logical** (ஒப்பிடுதல், சூத்திரங்களை உருவாக்குதல், அவற்றிற்கான முடிவுகளை கண்டுபிடித்தல்) பணிகளை மேற்கொள்வதில் மிகக் குறுகிய நேரத்தையே எடுக்கின்றது.

இங்கு நாங்கள் செக்கன்கள், மில்லி செக்கன்கள், நனோ செக்கன்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். கணினியானது பல பணிகளை நனோ செக்கன்களில் செய்யும் ஆற்றல் கொண்டவை. ஒரு நனோ செக்கன் என்பது செக்கனை கோடியால் பிரித்து வரும் நேரத்தின் அளவாகும்.

| | |
|---|---|
| 01 நிமிடம் | = 60 செக்கன் |
| 01 செக்கன் | = 1000 மில்லி செக்கன் |
| 01 மில்லி செக்கன் | = 1,000,000 நனோ செக்கன் |

எனவே, கணினியின் வேகத்தை எம்மால் சற்று கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

**செம்மையும் நம்பகத்தன்மையும் (Accuracy and Reliability):**

கணினி மிகச் செம்மையாக பணிகளை செய்பவை. கணினியின் பணிகளை மேற்கொள்ளப் பயன்படும் இயந்திரப் பாகங்கள் தேய்விற்கு உட்படுவதில்லை. எனவே, அதன் பயனை எப்போதும் ஒரேயளவில் பெற்றுக் கொள்ள முடியும். எனவே, சரியான தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குமிடத்து மிகச் சரியான தகவல்களையே கணினி எப்போதும் பெற்றுத் தரும்.

எனவே, செம்மையான முடிகளின் மீது நம்பிக்கை வைக்க முடிகின்றது. பிழையான உள்ளீடுகளை வழங்கும்போது அல்லது பிழையான அறிவுறுத்தல்களை வழங்கும்போதே பிழையான



வெளியீடுகளாக தகவல்களை கணினி வழங்குகின்றது. **GIGI** என்ற எண்ணக்கரு இக்கருத்தை தெளிவுபடுத்துகின்றது **(Garbage In Garbage Out).**

**செயற்திறன் (Capability):**

கணினியை பல்வேறு பணிகளை ஒரே நேரத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரே நேரத்தில் பாடல் ஒன்றை கணினியில் இசைக்கச் செய்து கொண்டே **(Windows Mediaplayer)** படங்களை மாற்றம் செய்யும் மென்பொருளைக் **(Photoshop)** கொண்டு பணியாற்ற அல்லது கணினி விளையாட்டு ஒன்றை விளையாடவும் முடியும்.

**தகவற் கொள்ளளவு (Storage Capacity):**

கணினியில் தேக்கி கோடிக்கணக்கான அலகுகள் கொண்ட தரவுகளை தேக்கி வைத்துக் கொள்ள முடியும். தேக்கி வைப்பதற்காக கணினியில் தேக்க சாதனமாக வன்தட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேக்கி வைக்கப்பட்ட தரவு, தகவல்களை பல்லாண்டுகளுக்குப் பின்னரும் எதுவித மாற்றமும் இன்றி அவ்வாறே மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும்.

**திறன் (Efficiency):**

கணினி களைப்படைவதில்லை. ஒரே விடயத்தை எத்தனை தடவையும் எத்தனை மணிநேரமும் சலிப்படையாமல் பணிகளை கச்சிதமாக செய்து தரவல்லது. கணினிக்கு ஓய்வு நேரம் தேவையில்லை. அதன் தொடர்பணியினால் தவறுகள் ஏற்படுவதில்லை. எனவே, கணினி அதீத திறன் கொண்ட ஓர் இயந்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கா(அ)கம்

கம்பெடுத்து தும்பெடுத்து
கயிறு சணல் சேர்த்தெடுத்து
ஆசையோடு தான் அமைத்த
அழகான கூட்டினிலே
குயிலுக்கும் முட்டையிட
இடமளிக்கும் வள்ளல் (எ) அது

சுற்றுப்புறம் சுத்தம் செய்ய
தூர இருக்கும் இன சனத்தை
கரைந்தழைத்து ஒற்றுமையாய்
பகிர்ந்துண்ணும் பாடமதை
பாருக்கே புரியவைக்கும்
உதாரணப் பறவை (எ) அது

பூமியிலே முதல் ஜனாஸா
புதைத்திட வழி தெரிய நிற்க
ஆதமின் மகனுக்கே
ஆழக் குழியிடக் காட்டி
அடக்கம் செய்ய வழிசமைத்த
அகிலத்தின் முதல் ஆசான் (எ) அது

தருமத்தில் பெருவள்ளல்
ஒற்றுமையில் உயர் சிகரம்
அறிவினிலே பேராசான்
அன்பான கரும் பறவை
தூய்மையிலும் அது மேலே
தூக்கம் விட்டெழுப்பும் தோழன்

**இராணி பௌசியா**
**கல்லளை, கதுறுவெல**

# உள்ளக் குமுறல்

உள்ளக் குமுறல்
தோல் எனும் பள்ளத்தாக்கில்
மாண்டு விட நான் ஒன்றும் சளைத்தவனல்ல
இகழ்ச்சி எனும் சொல் தாக்குதலில்
துவண்டு விட நான் ஒன்றும் கோழையல்ல

எனக்காய் என் நலவின்
என் வெற்றியின் ஏணிப் படிகள்
அதிலோ சில குளறுபடிகள்
அவையே என தளிர் படிகள்

வெற்றி வெறும் வெற்றுப் பேச்சுக்களில் அல்ல
இன்றுவென்று நன்று வாழ
நான் ஒன்றும் இமயக் குன்று அல்ல
தோல்வியால் என் முயல்வால்
உருவாகும் என் வெற்றியின் ஏணிப்படிகள்

இன்று இல்லை என்றாலும்
ஒரு நாள் பூரணமாகும் படிகள்
தளர்ந்துவிடும் என் குளறுபடிகள்
நிலைத்து விடும் என் ஏணிப்படிகள்



**அமீன் முஹம்மட் அஸீம்**
**இஸ்லாஹிய்யா வளாகம்**

## பேசும் கவிதை - இல 39



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 செப்டெம்பர் 30**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்**

## முதலிடம் பெற்ற கவிதை

### ஹுூத் ஹுூத்

அழகில் அற்புதமாய்
அறிவில் அதிசயமாய்
அல்லாஹ்வின் படைப்பினமாய்
சுலைமான் நபி அவரின்
சரித்திரத்தில் சங்கமித்த
அல்குர்ஆன் கூறும்
அற்புதம் ஹுூத் ஹுூத்!

**எம்.ரு. உமாரா**
**ஹில் கன்றி ச.பா.**
**மடவளை**

### அழகு

இறைவன் படைத்த இவ்வழகு
இயற்கை அது தனியழகு
அன்னையின் வார்த்தைகளும்
அவளூட்டும் உணவும்கூட
இப்பூவுலகிற்கு கலையழகு

**நஸ்மா நஸார்**
**ஸாஹிரா கல்லூரி,**
**மாவனல்லை**

### விசித்திரப் பறவை

பெண் அரசிக்கு நடனம் காட்டி
சுலைமானுக்கு செய்தி சொல்லி
தண்ணீர் இருக்கும் இடம் காட்டி
தமிழில் கொண்டலாந்தி எனும்
'ஹுூத் ஹுூத்' பறவை நீயே

**எம்.எஸ்.எம்.எச். டீன்**
**மஹவத்த, மாவனல்லை**

### தொடரட்டும் உன் சேவை

குர்ஆன் எனும் பொக்கிஷத்தில்
சுலைமான் நபியின் சரித்திரத்தில்
செய்தி சொன்ன பறவையென
அனைவரையும் வியக்க வைத்தாயே!
ஹுூத் ஹுூத் எனும் பெயரில்
குடும்பத்திற்கு உணவூட்டும் ஹுூதே!
தொடரட்டும் உன் சேவை!

**ஆர்.எம். ரஸ்னி**
**நீர்/ அல்-பலாஹ் ம.வி.**
**போருதொட்ட**
**கொச்சிக்கடை**

### ஏக்கம்...!

குப்பைகள்தான்- உன்
பிரியமென்பதாலா
இஸ்ரேலிய பிணந்தின்னிகளின்
பிரியமானாய் நீ...!
தேசமே இல்லாதவனுக்கு
தேசியமானாயோ நீ..!
நபி ஸுலைமானிடம் ஏவிய தூதை
பலஸ்தீனப் பாலகன் காதில்
பகராயோ ஹுூத் ஹுூதே...!?

**நஜ்லா கமால்**
**அல் அஸ்ஹர் கல்லூரி,**
**ஹெம்மாதகம**

### ஹுூத் ஹுூத்

அல்குர்ஆன் மொழிந்திடும்
அதிசயப் பிறவி நீ!
சுலைமான் நபியின்
பேசும் பறவை நீ!
கொண்டை விரித்து ஆடிடும்
கொண்டலாந்தி நீ!
வண்ண இறக்கை விரித்து
வதிவிடம் தேடி
மதி அழகினால்
மரத்தினைக் கொத்திடும் பட்சியே!

**நி.பா. நிப்லா**
**நெய்தல் நகர்,**
**மூதூர்-01**

### ஹுூத் ஹுூத்

நீண்ட சொண்டில்
நிறைய செய்திகள்
சொல்லும்...
குர்ஆனிய பறவை
நீ...

**எம்.ஐ. மஹ்தி**
**திகண,**
**ரஜவெல்ல**

### தாய்

அன்பின்
உறைவிடமும் நீயே!
அரவணைப்பின்
ஊற்றும் நீயே!
அதிசயத்தில்
முதலிடம் நீயே!
உன் அன்புக்கு
இணையில்லை தாயே!

**எம்.ஐ.எப். ரிஹ்மா**
**வளவுவத்த, மாவனல்லை**

### அற்புதம்

உன் அலகில்
அல்லாஹ்வின்
அற்புதமும்
உன் அழகில்
அல்லாஹ்வின்
ஆற்றலும் தெரிகிறது...

**பாத்திமா மின்ஹா**
**ஹிஜ்ராபுர மு.ம.வி**
**ரஜவெல்ல**

### துதி பாடிய

தூர தேசத்திற்கு
தூதை சுமந்து
துல்லியமாய் சென்று
சுலைமான் நபிக்கு
துதி பாடிய
அல்லாஹ்வின்
அற்புதம்
நீ

**பாத்திமா மனால்**
**அன்நூர் ம.க.**
**பானகமுவ**

### பறவை

பாசமுள்ள பறவை
சுலைமான் நபியின்
மொழியை புரிந்து
சாதனை செய்தாயே....

**எச்.ஏ. ஹாலா**
**பண்ணவ ம.க.**
**பண்ணவ**

### படைப்பு

நுணுக்கங்கள் நிறைந்த
நுண்ணியமாய் எதையும் அறிந்த
அல்லாஹ்வின் அற்புதப்
படைப்புகளில் நீ
உயர்ந்தது.

**ஸைமா மர்யம்**
**கெகுணகொல்ல**

### அற்புதம்

தேசம் கடந்து
ஈமானின் வாசத்தை
சுலைமான் நபிக்கு
எடுத்துச் சென்ற
அன்பின் பறவை
அற்புதப் பறவை
ஹுூத் ஹுூத்

**ரீஹா மர்யம்**
**வாரியபொல**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் ஸ்போர்ட்ஸ்

விரைவு – உயர்வு – துணிவு

# 44ஆவது தேசிய விளையாட்டு விழா

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக் களம் ஏற்பாடு செய்துள்ள வருடத்தின் மிகப் பெரிய விளையாட்டு திருவிழாவான 44ஆவது தேசிய விளையாட்டு விழாவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை பொலன்னறுவை தேசிய விளை யாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு விளையாட் டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

# 2019 தெற்காசிய விளையாட்டு விழாவில் மீண்டும் கிரிக்கெட் இணைப்பு

SOUTH ASIA OLYMPIC COUNCIL



தெற்காசிய ஒலிம்பிக் சம்மேளனத்தினால் 2 வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்ற தெற்காசிய விளையாட்டு விழாவை திட்டமிட்டபடி அடுத்த வருடம் (2019) நேபாளத்தில் நடத்துவதற்கு தெற்காசிய ஒலிம்பிக் சம்மேளனம் அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இவ்விளையாட்டு விழா நேபாளத்தின் தலைநகர் கத்மண்டு மற்றும் அந்நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான பொக்காரவில் நடைபெறவுள்ளது.

13ஆவது தடவையாக நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டு விழாவில் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளதுடன், முதற்தடவையாக வான் சறுக்குப் போட்டிகளும் (Paragilding) இணைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்ச மாகும். இதனையடுத்து, தெற்காசிய விளையாட்டு விழாவை எதிர்வரும் 2020ஆம் ஆண்டு இலங்கை யில் நடத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சும் தேசிய ஒலிம்பிக் சம்மேளனமும் அவதானம் செலுத் தியிருக்கின்றன.

# இம்ரான் கான்



பாகிஸ்ானின் தற்போதைய பிரதமராக பதவியேற்றுள்ள இம்ரான் கான் கிரிக்கெட் வரலாற்றில் தடம் பதித்த ஒருவர் என்பதை விளையாட்டு உலகம் நன்கு அறியும். அவர் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக்களை அகரம் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

இம்ரான் கான் பஷ்தூன் மரபைச் சேர்ந்தவர். இவர் நவம்பர் 25, 1952 இல் லாகூர், பஞ்சாபில் பிறந்தார். இவர் வோர்செஸ்டர் மற்றும் ஆக்சுபோர்டில் உள்ள கெப்ளி கல்லூரியிலும் பயின்றார். தனது 13 ஆம் வயது முதல் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு வந்தார். முதலில் தனது கல்லூரி அணிக்காக விளையாடிய இவர் பின் வோர்செஸ்டர்ஷயர் துடுப்பாட்ட சங்கத்திற்காக விளையாடினார். 1971 ஆம் ஆண்டில் பிர்மின்ஹாமில் நடைபெற்ற போட்டியில் தனது 18 ஆம் வயதில் பாகிஸ்தான் அணிக்காக விளையாடினார். ஆக்சுபோர்டுவில் பயின்ற பிறகு இவர் 1976 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் தேசிய அணியில் இடம் பிடித்தார். இவர் 1982 முதல் 1992 ஆம் ஆண்டு வரையில் தலைவராக இருந்துள்ளார். 1992 இல் பாகிஸ்தான் உலகக் கிண்ணம் வென்றபோது அணித் தலைவராக இருந்தார்.இவர் 1992 ஆம் ஆண்டில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். 362 தேர்வுத் துடுப்பாட்டப் போட்டி களில் விளையடி இவர் 3,807 ஓட்டங்கள் எடுத்தார். அனைத்துக் காலத்திற்குமான சிறந்த சகலதுறையர் களில் ஒருவராக அறிமுகமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

மறைந்த பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் முயற்சிகளினால் இந்தப் போட்டிகள் 1951 இல் ஆரம்பிக்கப்பட்டன. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கு நடுவில் இவை நடக்கின்றன. புதுடில்லியில் 1951 இல் முதல் போட்டி நடந்தது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் (அப்போதைய இந்திய ஜனாதிபதி) போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். 11 நாடுகளில் இருந்து சுமார் 486 பேர் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். 'எப்போதும் முன்னோக்கி **(Ever Onward)**' என்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் முத்திரை வாக்கியத்தை பண்டித ஜவஹர்லால் நேரு முன் மொழிந்தார். சின்னம்: பிரகாசமாக உதிக்கும் சூரியன் மற்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வளையங்கள். டோர்ச் மற்றும் கொடி பட்டியாலாவின் மஹாராஜா வினால் வழங்கப்பட்டன. 18 ஆவது ஆசிய விளை யாட்டுப் போட்டி கடந்த மாதம் இந்தோனேசியா ஜகார்த்தா நகரில் நடைபெற்றது.

# சாப் (SAF)
## விளையாட்டுப் போட்டிகள்

- ஆசிய நாடுகள் இந்தப் போட்டியை நடாத்தி வருகின்றது.
- 1984 ஆம் ஆண்டு நேபாளம் காத்மண்டில் இப்போட்டி முதன் முதலாக நடைபெற்றது.
- தெற்காசிய நாடுகள் ஒன்று சேர்ந்து நடாத்தும் போட்டிகள் இதுவாகும்.
- இப்போட்டி 2 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது.

# சபானின் சாதனை




96ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் கடந்த மாதம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நிறைவுக்கு வந்தது. இதில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆண் களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் லங்கா லயன்ஸ் கழகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட 20 வயதுடைய இளம் வீரர் மொஹமட் சபான், போட்டித் தூரத்தை 21.34 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கம் வென்றார்.

# உதைப்பந்தாட்டம்

- உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் **(FIFA)** நடாத் தப்பட்டு வருகின்றது.
- சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டிகள் நடை பெறும் கால அளவு 90 நிமிடங்கள்.
- முதலாவது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி 1930 இல் உருகுவேயில் நடைபெற்றது. உருகுவே அணி சம்பியனானது. இதன்போது யூல்ஸ் நிமெற் கிண்ணம் வழங்கப்பட்டது. 1982 முதல் இது **FIFA WORLD CUP** எனப்படுகின்றது.
- உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த வீரருக்கு - தங்கப் பந்து விருது; கூடிய கோல்கள் அடிக்கும் வீரருக்கு - யாஷின் விருது வழங்கப்படுகின்றது.
- உலகில் அதிக மக்களால் விரும்பிப் பார்க்கப் படும் விளையாட்டு - உதைப்பந்தாட்டம்
- 2002 இல் நடைபெற்ற 17 ஆவது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியில் பிரேசி ல் சம்பியயினாகியது. இதன் மூலம் இக்கிண்ணத்தை ஐந்து முறை வென்ற பெருமைக்குரியதாகியது.
- முரட்டுத்தனமான ஆட்டத்தைத் தடுக்கும் மஞ்சள் அட்டை கொண்டு வரப்பட்ட உலகக் கிண்ணப் போட்டி - 1974



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக் கதை

# செயல்திறனும் கருவிகளும்



ஒரு பலசாலியான மரவெட்டி ஒரு மர வியாபாரியிடம் வேலைக்குச் சேர்ந்தார். மர வியாபாரி தனது ஊழியர் களுக்கு நல்ல சம்பளம் கொடுத்ததோடு உற்சாகத்தோடு பேசவும் பழகவும் கூடியவர். மரவெட்டி உண்மையாகவும் கடினமாகவும் உழைக்கக் கூடியவர். மர வியாபாரியின் நல்ல குணங்களைப் பார்த்து மேலும் நன்றாக உழைக்க முடிவெடுத்தார்.

முதல் நாள் உற்சாகத்தோடு இருபது மரங்களை வெட்டி னார். ''பலே!'' என்று பாராட்டினார். மர வியாபாரி, ''நன்றாக வேலை செய்கிறாய்'' மரவெட்டி மகிழ்ச்சியடைந்தார்.

மறு நாள் மிகவும் முயற்சி செய்தும் அவரால் பதினெட்டு மரங்களைத்தான் வெட்ட முடிந்தது. மூன்றாம் நாளும் கடினமாக உழைத்தார். ஆனால், பதினைந்து மரங்களைத் தான் வெட்டினார்.

இப்படியாக ஒவ்வொரு நாளும் அவர் எவ்வளவு முயன்றும் வெட்டும் மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.

கவலையுற்ற அவர் மர வியாபாரியிடம் சென்று மன்னிப்புக் கேட்டார். தனது பலம் குறைந்து வருவதாகவும் என்ன செய்வ தென்றே தெரியவில்லையென்றும் வருத்தப் பட்டார். மர வியாபாரி, ''உன் கோடரியை கடைசியாக எப்போது தீட்டிக் கூர்மைப் படுத்தினாய்?'' என்று கேட்டார்.

மரவெட்டி ''நான் என் கோடரியை கூர் மைப்படுத்தவேயில்லை. உழைப்பதிலேயே தீவிரமாக இருந்ததால் மறந்து விட்டேன்'' என்றார்.

**''உறுதியும் கடின உழைப்பும் விடாமுயற் சியும் மட்டுமே வெற்றியைத் தந்து விடாது. செயல்திறன், திறமை மற்றும் அவற்றுக்கான கருவிகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.''**

31 ஆம் பக்கத் தொடர்...

ஆனால், ஓர் எறும்பு மாத்திரம் அவ்விடத்தி லேயே நின்று சிந்தித்தது. சற்று நேரத்தில் சுமந்து வந்த உணவை அந்த விரிசல் மீது வைத்தது. அதன் மீது ஊர்ந்து சென்று விரிசலைக் கடந்தது. பின் தன் உணவை இழுத்தெடுத்துச் சென்றது. இதனைக் கண்ட ஏனைய எறும்புகளும் அதே மாதிரி செய்தன. இறுதியில் அனைத்து எறும்புகளும் தம் தடையைக் கடந்து வெற்றிகரமாக உணவுடன் கூட்டைச் சென்றடைந்தன.

உடனே காயித் எழுந்தார். ''நண்பர்களே! நாம் தான் வெல்லப் போகிறோம், இன்ஷா அல்லாஹ். எறும்புகள் கொண்ட விடாமுயற்சி வெற்றியைக் கொண்டு வந்ததே! நம்மால் முடியாதா? அந்த எறும் புகளுக்கு ஒரு துன்பம் வந்தது. ஆனால் அந்த துன் பத்திலிருந்து விடுபட சந்தர்ப்பங்கள் இல்லை என நினைத்தோம். ஆனால், எறும்பு சந்தர்ப்பத்தை உருவாக்கியது. அவ்வாறே நாமும் நமக்கு ஏற்படும் துன்பத்தையும் பாலமாக வைத்து, முன்னேற வேண்டும். எறும்பு சிறியதுதான். ஆனால், அதன் தன்னம்பிக்கை மிகப் பெரியது. நமக்கு அது இருந் தாலே வாழ்வில் எந்தத் தடையையும் எளிதாக கடக்கலாம். நாம் சிறு படைதானே என கவலை கொள்ள வேண்டாம். விடாமுயற்சியும் தன்னம்பிக் கையும்தான் நமது பலம்.

ஆரம்பத்தில் எல்லா எறும்புகளும் சோர்ந்தன. ஆனால் ஓர் எறும்பு துணிந்தது. ஏனையவையும் துணிந்தன. அவ்வாறே நமது தலைமைத்துவம் சிறப்பாக இருந்தால் வெற்றி நிச்சயம். நமது தடைக்கற்களை படிக்கற்களாக்குவோம். சுமைகளை சுகங்களாக்குவோம். சவால்களை சந்தர்ப்பமாக்கு வோம். வேதனைகளை சாதனைகளாக்குவோம். தொட்ட காரியத்தை இடையில் விட்டுவிடாமல் தொடருவோம். இந்தக் குகை நமது முடிவல்ல. தொடக்கம் இது தடையல்ல, சந்தர்ப்பம். குகைக்கு மேலே பெரும் பாறாங்கற்கள் உண்டு. அதனை உருட்டி விடுவோம். குகைக்கு கீழே சுரங்கம் உண்டு. அங்கிருந்து மறைந்து தாக்குவோம். நமது அம்புகள் மட்டும் வெளிச் செல்லும் வகையில் குகையில் துளையிடுவோம். அதனூடாகத் தாக்கு வோம். நம்மை நோக்கி எந்த அம்பும் வராமல் குகைச் சுவர்கள் பாதுகாக்கும். நமது அம்புகள் முடியும் வரை இவ்வாறு செய்வோம் முடிந்ததும் சுரங்கம் வழியாக வெளிச் சென்று தாக்குவோம்'' என்றார்.

வீரர்கள் காயிதின் திட்டத்தை ஏற்றனர். போராடி னர். தாக்குதலை எதிர்பார்க்காத ஜஸீரா வீரர்கள் சிறிது நேரத்திலேயே தோல்வியைத் தழுவினர். காயிதிடம் சரணடைந்தனர். காயித் ஜஸீரா தீவை மீட்டெடுத்தார். தன் ஊரார்களை வரவழைத்தார். ஜஸீரா மக்களுக்கு இஸ்லாத்தை எடுத்தரைத்து தம்முடன் வாழும்படி அனுமதியும் வழங்கினார். மீண்டும் ஜஸீரா தீவுக்கருகில் உள்ள மற்றொரு தீவை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டெடுக் கத் தயாரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக் கதை

கவிஞர் கண்ணதாசன் ஒரு கல்லூரிக் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது. அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடிந்ததும் கரவொலி அடங்க வெகு நேரம் பிடித்தது. கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார், ''இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதையை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே, நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்க சொல்லி விட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என் கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய, சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது. ஆனால், நாம் சொல்பனை விடவும் சொல்லும் விடயத்தில்தான் அக்கறை காட்ட வேண்டும். அது தான் எம் உள்ளத்தை வளப்படுத்தும்''

## எண்ணங்களின் வண்ணங்கள் 31

### பாராட்டுக்குரியவர்கள்

அ.ற. ஆயிஷ – அக்/ஆயிஷா ம.ம.க., அக்கரைப்பற்று 02
எம்.எச். பர்ஹா ஹுஸைன் – ப/அல்முர்ஷிட் ம.வி., சில்மியாபுர
என்.எப். நப்ரின் – தி/பாத்திமா பெ.ம.வி., முள்ளிப்பொத்தானை
எம்.என். அஸ்ஜத் அஹமட் – மட்/அல் ஜுப்ரியா வி., ஏறாவூர்
எம்.என்.எம். பஸ்லான் – தெஹிகஸ்தலாவ, பலாங்கொடை
எம்.டீ.எப். பசீஹா – அ/கல்லாஞ்சியாகம அரபா மு.வி., காகம
ஏ.எம். அக்ஸன் – அ/கல்லாஞ்சியாகம அரபா மு.வி., காகம
எம்.எச்.எப். சபூரா – அ/கல்லாஞ்சியாகம அரபா மு.வி., காகம
எம்.ஆர்.எப். பதீஹா சஹானி – கமு/அல் அமீர் வி., சம்மாந்துறை
ஏ.டபிள்யூ. ஸமா மர்யம் – முனவ்வர கனிஸ்ட பா., அக்கரைப்பற்று 05
ஏ.டபிள்யூ. ஹயா மர்யம் – முனவ்வர கனிஸ்ட பா., அக்கரைப்பற்று 05
எஸ்.ஐ.எப். தஸீபா – மட்/செம்மண்ணோடை அல் ஹம்றா வி.
எம்.என். ஆயிஸா செரோ – தி/அன்னூரியா மு.க.வி., குச்சவெளி
என்.எப். அப்றா – தி/மூ/அந்நஹார் ம.ம.வி., மூதூர்
ஏ.எம். சகீலா – ப/அல்முர்ஷிட் ம.வி., சில்மியாபுர
எம்.எஸ்.எப். சம்ரா – அல் ஹிக்மா மு.ம.வி., நிகதலுபொத
ஏ. கதீஜா – அல் ஹிக்மா மு.ம.வி., நிகதலுபொத
ஆர்.எம். ரிஸான் – ப/அல்முர்ஷிட் ம.வி., சில்மியாபுர
நஸ்மா முஸ்தபா – அல் ஹுதா ம.க., திஹாரி
எம்.எஸ். ஹிக்மா – பாபுஸ்ஸலாம் ம.வி., நாம்புலுவ
எம்.இஸட்.எப். ரிஸ்மா – க/அக்குரணை மு.பெ.ம.க.
என்.எப். நுஸா – அ/கலாவெவ மு.ம.வி., விஜிதபுர
எஸ்.எச்.எப். ஸஹ்னா – ப/அல்முர்ஷிட் ம.வி., சில்மியாபுர
டீ.வை. செய்னப் – ஸாஹிர கல்லூரி, குருணாகல்
எம்.என்.எப். நிஸ்மா சஹ்ரின் – பு/மதவாக்குளம் மு.ம.வி.
என்.எப். பர்ஸானா – கே/தனகம ம.வி., மாவனல்லை
என்.எப். நிப்லா – மனாறுல் ஹுதா பெ.அ.க., மூதூர் 01
ஏ. அப்சல் அஹமட் – மட்/அல் ஜுப்ரியா வி., ஏறாவூர்
எம்.ஐ.எம். அர்ஹம் – சில்வெஸ்டார் கல்லூரி, கண்டி
எம்.எஸ். இல்முன் நதா – கே/ஸாஹிரா தே.பா.
ஆர்.எப். ரிப்பத் ரசா – பு/சைனப் ஆ.பா., புத்தளம்
ஏ.என்.எப். முனா – கொத்தாந்தீவு
ஏ. நவால் – நிகதலுபொத
எம்.என். சஹ்லா – வெலம்பொட மு.ம.வி.
ஏ.எம். அப்ஸான் – மீராவோடை 04
சமீஹா – அல் அஸ்ஹர் ம.க.
டபிள்யூ.எம். ரிப்கி – மட்/ஓட்டமாவடி ம.க.
எம்.எஸ்.எப். மின்ஹா – ஹிஜ்ரா புர மு.ம.வி.
ஏ.எச்.எப். ஹம்தா – தி/மூதூர் ம.க., மூதூர் 05
ஏ.எஸ்.எப். ஸபா ஸஹ்லான் – நாம்புலுவ
எம்.எச். ஹஷீம் – ஸாஹிரா க., மாவனல்லை
எம்.எச். ஹப்ஸன் அஹமட் – சம்மாந்துரை 01
பஸ்மா முஸ்தபா – அல் ஹுதா ம.க., திஹாரி
ஏ.ஏ. பர்ஹான் – ஸாஹிரா க., மாவனல்லை
ஏ.டீ.எப். ஹஸ்னா – மின்ஹாஜ் ம.வி., நிககொல்ல
டீ. ஆஷா பேகம் – அலியாவெடுனுவெவ மு.ம.வி., தம்புத்த
எம்.கே. ஹிதா – அலியாவெடுனுவெவ மு.ம.வி., தம்புத்த
எம்.எம். பாத்திமா – அல் பஹ்ரியா ம.க., தொடவத்த
எப். பஸீனா – மே/பலாந்தை மு.வி., அகலவத்தை
எம்.எப். அம்மார் – மீரா ம.க., கட்டுகஸ்தோட்டை
என்.எப். அதீபா – மட்/அல் ஜுப்ரியா வி., ஏறாவூர்
எ.சீ.ஏ. சஜாத் – மட்/அல் ஜுப்ரியா வி., ஏறாவூர்
இஸ்ட்.ஐ.எப். ஷாகிரா – ப/அல் முர்ஷித் ம.வி., சில்மியாபுர
அஸ்மா இக்ராம் – பலாந்தை, அகலவத்தை
ஜே.எப். ஸானு – அக்/அந்நூர் ம.வி. அட்டாளைச்சேனை
எம்.ஆர்.எம். ரிகாஸ் – நிக/பன்னவ மு.ம.க.
நிஸ்லா நியாஸ் – அல் அஸ்ஹர் ம.க., முருதலாவ
எம்.எஸ்.எம். சாபிக் – மட்/அல் ஜுப்ரியா வி., ஏறாவூர்

## எண்ணங்களின் வண்ணங்கள் - 32

### தலைப்பு: பறவைக் கூட்டம்

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 செப்டெம்பர் 30**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2018

## விளக்கம், பயிற்சி

எம். ஷஹீல் காசிம் BEd. (Hons) | அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12

தொடர்புகளுக்கு:
071 445 2120

# கணிதம் (பணம்)

**பூரணமற்ற சிட்டை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அவற்றினை பூரணப்படுத்துக.**

| பொருள் | அளவு | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூ | சதம் | ரூ | சதம் |
| பயிற்சி புத்தகம் | 6 | 20 | 00 | 120 | 00 |
| பென்சில்கள் | 2 | ...... | ...... | 16 | 50 |
| பேனை | ...... | 9 | 00 | 27 | 00 |
| கடித உறை | 3 | ...... | ...... | 4 | 50 |

**கீழே பொருள்களின் விலைப்பட்டியல் ஒன்று தரப் பட்டுள்ளது.**

*1 வரைதற் புத்தகம் - ரூ. 34.50*
*1 பென்சில் - ரூ. 9.00*
*1 பிஸ்கட் பெக்கட் - ரூ. 38.00*

மேலுள்ள விலைப்பட்டியலுக்கு ஏற்ப 3 வரைதற் புத்தகம், 2 பென்சில் 2 பிஸ்கட் பெக்கட் என்பவற்றினை கொள்வனவு செய்வதற்கு பின் வரும் சிட்டையை பூரணப்படுத்துக.

| பொருள் | அளவு | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | சதம் | ரூ. | சதம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

| பொருள் | அளவு | விலை | பணம் | |
|---|---|---|---|---|
| | | 1Kg | ரூ. | சதம் |
| அரிசி | 4Kg | 90.00 | ....... | ....... |
| பருப்பு | 2Kg | 120.00 | ....... | ....... |
| சீனி | 5Kg | 72.00 | ....... | ....... |
| வெங்காயம் | 3Kg | 95.00 | ....... | ........ |
| தேயிலை | 500g | 400.00 | ....... | ........ |
| கோதுமை மா | 3Kg | 65.00 | ....... | ........ |
| | | மொத்தம் | ........ | ........ |

**பின்வரும் பற்றுச் சீட்டை பூரணப்படுத்துக.**

| பொருள் | அளவு | ஒன்றின் விலை | பணம் | |
|---|---|---|---|---|
| | | 1Kg | ரூ. | சதம் |
| போஞ்சி | 2Kg | 50.00 | ........ | ....... |
| உ. கிழங்கு | ....... | 80.00 | 400 | 00 |
| லீக்ஸ் | 500g | 72.00 | ....... | ...... |
| கத்தரி | 3Kg | ........ | 150 | 00 |
| கோவா | ......... | 60.00 | 45 | 00 |
| வெங்காயம் | 750g | ...... | 36 | 00 |
| | | மொத்தம் | | |

**விலைப்பட்டியலை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| பருப்பு | 3Kg | 330.00 |
| அரிசி | 2Kg | 220.00 |
| சீனி | 1Kg 500g | 180.00 |
| நெத்தலி | 1Kg | 210.00 |
| மா | 1Kg | 45.00 |

1. அரிசி **1 Kg** இன் விலை யாது?
..........................................................
2. **1 Kg** சீனியின் விலை யாது?
..........................................................
3. நெத்தலி **6 Kg** இன் விலை யாது?
..........................................................
4. **2 Kg** மாவின் விலை யாது?
..........................................................
5. பருப்பு **5 Kg** இன் விலை யாது?
..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருட்களின் விலையைக் காண்க**

| | | | |
|---|---|---|---|
| பென்சில் பெட்டி ரூ. 220.00 | பொம்மை ரூ. 345.25 | மாம்பழம் ரூ. 27.50 | வர்ணப் பெட்டி ரூ. 83.50 |
| தேங்காய் ரூ. 37.50 | விளையாட்டுக் கார் ரூ. 550.00 | கைக்குட்டை ரூ. 55.50 | கொய்யாப்பழம் ரூ. 22.50 |
| முட்டை ரூ. 11.00 | சீப்பு ரூ. 44.50 | கருவிப் பெட்டி ரூ. 163.50 | தொப்பி ரூ. 285.50 |

1. மேலே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி ஏதாவது இரு பொருட்களைத் தெரிவு செய்து அவற்றின் விலைகளை 4 முறைகளில் காண்க.
   1. ..............................................
   2. ..............................................
   3. ..............................................
   4. ..............................................
2. மாம்பழம் ஒன்றும் கொய்யாப்பழம் ஒன்றும் வாங்கி ரூ. 100 ஐ முதலாளிக்குக் கொடுத்தால் மீதியாக எவ்வளவு பணம் கிடைக்கும்?
   ..............................................
3. முட்டை ஒன்று வாங்கிய டசும் அதற்கான பணத்தை 3 நாணயங்களில் கொடுத்தாள் எனின், அந்நாணயங்கள் எவை?
   ..............................................
4. அப்பா விளையாட்டுக் கார் ஒன்றும் பென்சில் பெட்டியொன்றும் வாங்கி ரூ. 1000 ஐ முதலாளியிடம் கொடுத்தார். எனின் மீதியாக எவ்வளவு பணம் கிடைக்கும்?
   ..............................................
5. அம்மா ஒரு பொருளை வாங்கி கடைக்காரருக்கு 100 ரூபாவை கொடுத்தார். அதற்கான மீதிப் பணமாக ரூ. 16.50 கிடைத்தது எனின், அம்மா வாங்கிய பொருளின் விலை என்ன?
   ..............................................
6. உமாவிடம் இருந்த பணம் ரூ. 200 ஆகும். அவள் கடைக்குச் சென்று சீப்பு ஒன்றும் கருவிப் பெட்டி ஒன்றும் வாங்கினாள் எனின், மேலும் அவளுக்குத் தேவையான பணம் எவ்வளவு?
   ..............................................
7. கடைக்குச் சென்று பொம்மை ஒன்றும் தொப்பி ஒன்றும் வாங்கிய டசும் அதற்கான பணத்தை தாள்காசில் செலுத்திய விதத்தை குறிப்பிடுக?
   ..............................................
8. சமன் கடைக்குச் சென்று ரூ. 93 ஐ கொடுத்து வாங்கிய 2 பொருட்களும் எவை?
   ..............................................

10. ரூ. 200 ஐ கொடுத்து கருவிப் பெட்டி ஒன்று வாங்கினால் எவ்வளவு பணம் மீதியாக கிடைக்கும்?
   ..............................................

## சுற்றாடல் - (நீர்)

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. வாய்க்கால்கள், நதிகள் இவற்றுக்கிடையேயான வேறுபாடு பற்றி எழுதுக.
2. ''நிலத்திலே விழும் ஒரு துளி நீரையேனும் பன்படுத்தாமல் கடலிற் சென்று விடலாகாது'' என்னும் உயரிய இலட்சியத்துடன் செயற்பட்ட மன்னன் யார்?
3. நீர்வீழ்ச்சிகள் எவ்வாறு உண்டாகின்றன?
4. நீர்வீழ்ச்சியின் பயன் யாது?
5. தமிழர்களின் கலாசார நிகழ்வுகளில் நீரின் பங்களிப்பு யாது?
6. சிங்களவர்களின் கலாசார நிகழ்வுகளில் நீரின் பங்களிப்பு யாது?
7. நீர் அசுத்தமடைவதால் எமக்கு ஏற்படும் நோய்கள் எவை?
8. நீர் மின்சக்தி பெறுவதற்குப் பயன்படும் நீர் வீழ்ச்சிகள் சில கூறுக.
9. குளங்களின் அவசியம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நாம் பயன்படுத்தும் நீருக்கான நீர்க்கட்டணம் செலுத்தப்படும் இடம் எது?

**பின்வருவன சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (x) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.**

11. மலைநாட்டின் தரைத்தோற்றத்திற்கு நீர்வீழ்ச்சிகள் அழகைக் கொடுக்கின்றன. ( )
12. வாய்க்கால்கள் இயற்கையாகத் தோன்றியவை ஆகும். ( )
13. நதிகள் மலைப் பகுதிகளில் மனிதர்களால் வெட்டப்பட்டவை ஆகும். ( )
14. நீருக்கு நிலையான வடிவம் உண்டு. ( )
15. அசுத்த நீரைப் பருகுவதால் பல்வேறு நோய்கள் ஏற்படும். ( )
16. நீர்த் தேங்கி நிற்கும் இடங்களில் நுளம்புகள் வேகமாக பரவும். ( )
17. பாத்திரங்களின் வடிவத்திற்கு ஏற்ப நீரின் வடிவம் மாறுபடும். ( )
18. கொதித்தாறிய நீரை வடிகட்டல் ஆபத்தானது. ( )
19. நீர் நிலைகளில் குப்பை கூழங்களைக் கொட்டுவதால் நீர் மாசடைவதில்லை. ( )
20. நதிகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். ( )
21. நதிகள் அனைத்தும் உயரமான மலைகளில் இருந்தே ஊற்றெடுக்கின்றன. ( )
22. நீரை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு மனிதனால் வெட்டப்பட்டவையே வாய்க்கால் எனப்படும். ( )
23. இலங்கையின் பெரிய செயற்கை நீர்வீழ்ச்சி விக்டோரியா நீர்வீழ்ச்சி ஆகும். ( )
24. இலங்கையின் மிகப் பெரிய இயற்கை நீர் வீழ்ச்சி பம்பரகந்த ஆகும். ( )
25. இலங்கையின் அழகான நீர்வீழ்ச்சி துங்ஹிந்த ஆகும். ( )
26. வேகமாக பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சி மூலம் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ( )
27. "நிலத்தில் விழும் ஒரு துளி மழைக்கூடக் கடலுடன் கலக்கக் கூடாது" என்று கூறிய மன்னன் மகாபாராக்கிரம பாகு ஆவார். ( )
28. நதி, நீர்வீழ்ச்சிகள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றில் பொலிதீன், பிலாஸ்டிக் பொருட்களை கொட்டுவதால் அவை மாசடைவதில்லை. ( )
29. நீர் நிரம்பிய நிறைகுடம் வைத்தல் தமிழர்களின் திருமண சம்பிரதாயமாகும். ( )
30. நீர் நிரம்பிய பாத்திரம் கொடுத்து வரவேற்றல் முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயமாகும். ( )

**பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

பனிக்கட்டி, வடிவம், கண்ணாடியில், நீர், முக்கியத்துவம், டெங்கு, ஓர் அடர்த்தி, வாடும், ஆவியாக, குழாய்கள், மிதக்கும்

31. உயிரினங்கள் வாழ்வதற்கு .................. மிகவும் அவசியமாகும்.
32. நீரை விட மண்ணெண்ணெய் ................ குறைந்ததாகும்.
33. திண்ம நிலையில் உள்ள நீர் .................. எனப்படும்.
34. அன்றாட வாழ்க்கைக்கு நீர் மிகவும் ........ .......... வாய்ந்ததாகும்.
35. தாவர இலைகள் ..............ஆவியிடும் போது தாவர இலைகள் ....................
36. உலகில் உள்ள ................. சதவீதத்திற்கு குறைந்தளவே மனித பாவனைக்கு பயன்படுத்தப்படுகிறது.
37. பாத்திரங்களின் வடிவத்திற்கு ஏற்ப நீரின் ...................... காணப்படும்.
38. கொதிக்கும் நீராவி .................... பட்டால் அதில் நீர்த்துளிகள் காணப்படும்.
39. திரவ நிலையில் உள்ள நீர் வெப்பமடையும் போது நீர் ............... வெளியேறும்.
40. நகர்ப்புற மக்கள் நீரை ............... மூலம் பெறுகின்றனர்.
41. பகல் வேளையில் ..................... நுளம்பு மனிதனை தாக்குகின்றன.
42. பனிக்கட்டியை தண்ணீர் உள்ள பாத்திரத்தில் போட்டால் பனிக்கட்டி ...................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை படத்தில் பின்வரும் நதிகளைக் குறித்துக் காட்டுக.**

43. மகாவலி கங்கை
44. களனி கங்கை
45. களு கங்கை
46. வளவ கங்கை
47. ஜின் கங்கை
48. மாணிக்க கங்கை
49. நில்வளகங்கை



**A பகுதிக்கு பொருத்தமான விடையை B பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தினை கட்டத்தில் எழுதுக.**

**பகுதி A**

50. பனிக்கட்டி ☐
51. 97% சதவீதம் ☐
52. பிரித் ஓதிய நீர் தெளித்தல் ☐
53. புது வருடப் பிறப்பு ☐
54. குழாய் நீர்விநியோகம் ☐
55. லக்சபாண ☐
56. கலாவாவி ☐
57. மகாபராக்கிரமபாகு ☐
58. படகோட்டம் ☐
59. மகாவலி கங்கை ☐
60. நீர் பயன்படுத்தப்படும் கைத்தொழில் ☐
61. நீர்ப் பிரச்சினையை தீர்க்கும் ஒரு வழி ☐
62. பண்டுகாபயன் ☐
63. அசுத்த நீரை பருகுதல் ☐
64. கியுலெக் நுளம்பு ☐

**பகுதி B**

1. கொலரா
2. பராக்கிரம சமுத்திரம்
3. தாதுசேனன்
4. நீர் விளையாட்டு
5. திருகோணமலை
6. தும்புக் கைத்தொழில்
7. யானைக்கால் நோய்
8. குழாய்க் கிணறுகளை அமைத்தல்
9. பசவக்குளம்
10. திண்ம நிலை
11. மருந்து நீர்
12. நீர்வீழ்ச்சி
13. தோசம் நீங்க
14. நகர்ப்புறம்
15. உப்பு கலந்த நீர்

**பொருத்தமற்ற விடையின் கீழ்க் கோடிடுக.**

65. இலங்கையில் உள்ள பெரிய குளம்?
i. மின்னேரியா ii. பசவக்குளம்
iii. அபயவாவி iv. கன்னியாக்குளம்

66. இலங்கையின் பிரதான நீர்வீழ்ச்சிகள் அல்லாதது.
i. துங்ஹிந்த ii. தியலும
iii. கீரிமலை iv. பம்பரகந்த

67. இலங்கையின் பிரதான நதிகள் அல்லாதது.
i. பராக்கிரம சமுகத்திரம்
ii. களனி கங்கை
iii. களு கங்கை
iv. வளவ கங்கை

68. நீரினால் பரவும் நோய் அல்லாதது.
i. நெருப்புக்காய்ச்சல் ii. வயிற்றுளைவு
iii. வாந்திபேதி iv. டெங்கு

69. தமிழர்களுடைய திருமண வழக்கம்,
i. மணமகனின் கால்களைத் தோழன் கழுவி அன்புடன் வரவேற்றல்
ii. மணமகளின் தாய் நீர்நிரம்பிய குடத்தை வார்க்க, தந்தை கன்னதானம் செய்தல்.
iii. தம்பதியினர் முன்னால் நீர்நிரம்பிய பாத் திரத்தில் மோதிரம் ஒன்றைப் போட்டு எடுக்கச் செய்தல்.
iv. நீர்ப்பாத்திரங்களைக் கொடுத்து வர வேற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.**

1. குழந்தையின் அளுகைகயை மாற்ற தாய் வாளைப்பழம் கொடுத்தாள்.

   ................................................

2. பனையோளை விசிரி கொண்டு விசிரினான்.

   ................................................

3. பரவை இறையாகப் பயிறு வகைகளைத் திண்ணும்.

   ................................................

4. ஒடம்படு வலிக்கு வெண்ணீர் ஒத்தடம் கொடுத்தார்கள்.

   ................................................

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.**

5. அவையள் குழிச்சு விட்டுத்தான் கோயிலுக்குப் போகின மெண்டு சொன்னான்.

   ................................................

6. எலும்புத் தண்டைக் கவ்விய நாங்கள் குலைக் காமல் கூடி நிண்டு கடிச்சுக் கொண்டிருந்தது.

   ................................................

7. முயற்சியுள்ள மனிசர் எப்பவும் முந்நேறு வார்கள்.

   ................................................

8. பயிற்சி செய் கைக்கு நீர் பாச்சல் எம்மட்டு அவசரம் என்பதை விவசாய அமைச்சர் குறிப்பிட்டார்.

   ................................................

9. நாங்கள் எல்லாருங் குளத்த்திலிறங்கி நீங்கப் பழகினம்.

   ................................................

10. சந்தையில் மக்கள் கூட்டம் நிறைந்து காணப் பட்டன.

    ................................................

**பின்வரும் பேச்சுவழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்.**

11. போறன் ..........................
12. நோம்பு ..........................
13. ஒசக்கு ..........................
14. வூட்டுக்கு ..........................
15. திருநூறு ..........................
16. தொடப்பம் ..........................
17. பொடவை ..........................
18. காத்தாலே ..........................
19. பேந்து ..........................
20. வரேக்க ..........................

**பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுங்கள்.**

21. முயற்சி உடையோர் .................. அமைவர்.
    i. உயற்சி ii. உயர்ச்சி
    iii. உயச்சி iv. உயற்ச்சி
22. ................ வியர்வை நிலத்திற் சிந்தப் பாடுபட்டு உழைத்தான்.
    i. நெத்தி ii. நெர்த்தி
    iii. நெற்றி iv. நெற்த்தி
23. கெட்ட பழக்கங்களை ............. வேண்டும்.
    i. ஒளித்தல் ii. ஒலித்தல்
    iii. ஒழித்தல் iv. ஒலிதல்
24. ..................... இருள் முகில் நிறைந்து காணப்பட்டது.
    i. வாணம் ii. வர்ணம்
    iii. வானம் iv. வான்னம்
25. உனது ................... கோர்வை தொலைந்து விட்டது.
    i. திறப்பு ii. துறப்பு
    iii. திரப்பு iv. துரப்பு
26. நான் எல்லா ............. பங்கு பற்றுகிறேன்.
    i. நிகழ்ச்சியிலும் ii. நிகட்சியிலும்
    iii. நிகள்ச்சியிலும் iv. நிகழ்ச்சிகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 31

## தலைப்பு: பழக்கூடை

### பரிசில் பெறும் சித்திரங்கள்



றிப்னா பிர்தௌஸ்
திருங்கதெனிய,
மாவனல்லை.



எம்.எப். பாதிமா பௌஸி
தாருஸ் ஸலாம் பாலர் ப.
அட்டுலுகம, பண்டாரகம



ஏ.கே.எப். முஷ்ரா
மட்/மம/அல் ஜப்ரியா வி.
ஏறாவூர்

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



எம்.பீ. அத்தீப் அஹமட்
மட்/மம/ அல் ஜிப்ரியா வி.
ஏறாவூர்



அமீர் முஹம்மட் அப்றிட்
கமு/சது/அல்முனீர் வி.
சம்மாந்துறை



எம்.எப்.எப். ஸபிய்யா
அல் அஸ்ஹர் ம.க.
முறுதலாவ



ஆர்.எம். ரிஜ்வான்
அலியாவெடுனுவெவ மு.ம.வி.
கல்கமுவ



கே.இஸட்.எம். ஸாஹிர்
குளி/அல் ஹுமைரா ம.வி.
ஏதன்டவெல



கே.இஸட். ஸாகிரா
குளி/அல் ஹுமைரா ம.வி.
ஏதன்டவெல



அமீர் பாத்திமா அபக்கா
கமு/சது/அல்முனீர் வி.
சம்மாந்துறை



எம்.ஆர்.எப். ஸஹானா
இ/ஜெய்லானி தே.பா.
பலாங்கொடை



ஹஜிஸ்தா ஹுஸைன்
கல்லஞ்சியாகம, காகம்



எம்.இஸட். ஹில்மா
மாவத்துபொல
அலவத்துகொட



[illegible].கே.எம். [illegible]
நிக/அபுக்காகம மு.ம.வி.
அபுக்காகம



எம்.எம்.எப். சப்னா
நிக/பன்னவ மு.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org